தமிழக சட்டமன்றத் தேர்தல் - 2021

# காங்கிரஸ் தேர்தல் அறிக்கை

வெளியீடு:

**தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி**

சத்தியமூர்த்தி பவன், சென்னை

Email : tncongresstherthalarikai@gmail.com

## கே.எஸ். அழகிரி

தலைவர், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி

# அராஜக அ.தி.மு.க. ஆட்சியை அகற்றுவதே காங்கிரஸின் நோக்கம்

மத்தியில் நடைபெற்று வரும் வகுப்புவாத நோக்கம் கொண்ட பா.ஜ.க. ஆட்சிக்கு பாடம் கற்பிக்கின்ற வகையிலும், மாநிலத்தில் மக்கள் விரோத அராஜக அ.தி.மு.க. ஆட்சியை அகற்றுகிற வகையிலும் தமிழகத்தில் அமைந்துள்ள தி.மு.க. தலைமையிலான காங்கிரஸ் உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வெற்றி பெறவேண்டுமென்பது காலத்தின் கட்டாயமாகும். தமிழக மக்களை வஞ்சிக்கின்ற வகையில் பா.ஜ.க. அரசு செயல்பட்ட போது, அதை தடுக்க துணிவற்ற அரசாக அ.தி.மு.க. செயல்பட்டதையும் எவரும் மறந்திட இயலாது.

தமிழக சட்டமன்ற தேர்தலை பொறுத்தவரை மத்திய, மாநில அரசுகளுக்கு எதிராக மக்களை அணி திரட்டுகிற மகத்தான முயற்சியில் காங்கிரஸ் கட்சி தொடர்ந்து பாடுபட்டு வருகிறது. மதச்சார்பின்மை, ஜனநாயகம், சமூகநீதி, ஊழல் ஒழிப்பு, ஆட்சியில் வெளிப்படைத்தன்மை ஆகிய நோக்கங்களை கொண்ட மக்கள் நலன் சார்ந்த நல்லாட்சி அமைய வேண்டுமென்பதே தமிழக மக்களின் விருப்பமாகும். அத்தகைய விருப்பத்தை நிறைவு செய்கிற வகையில் அமைந்ததுதான் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி.

கடந்த பத்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் தமிழகத்தின் வளர்ச்சி அனைத்து நிலைகளிலும் பின்னுக்கு தள்ளப்பட்டுள்ளது. ஊழல் செய்து, செல்வத்தை குவிப்பதையே நோக்கமாகக் கொண்ட அ.தி.மு.க. ஆட்சி இனியும் தொடரக்கூடாது. அப்படி தொடர்வது தமிழகத்தின் எதிர்காலத்தை படுகுழியில் தள்ளுவதற்கு சமமாகும். எனவே, தமிழகத்தை சூழ்ந்துள்ள பேராபத்திலிருந்து மீட்டெடுக்கிற மகத்தான பணியில் காங்கிரஸ் கட்சி தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறது.

மத்திய, மாநில மக்கள் விரோத ஆட்சிகளால் தாழ்ந்த நிலைக்கு சென்று கொண்டிருக்கும் தமிழகத்தை மீட்டு, தலை நிமிர வைத்து பீடு நடை போட வைப்பதே இன்றையத் தேவையாகும். இந்த நோக்கம் நிறைவேற வேண்டுமானால் தமிழக வாக்காளர்கள் ஒன்று திரண்டு மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும். தங்களது வாக்குகளை எதற்கும் மயங்காமல், மசியாமல் வாக்களிப்பதன் மூலமே தங்களது எதிர்காலம் உறுதி செய்யப்படும்.

எனவே, வீழ்ச்சி பாதையில் சென்று கொண்டிருக்கும் தமிழகத்தை மீட்டெடுக்கும் நோக்கத்தில் தயாரிக்கப்பட்டதுதான் காங்கிரஸ் தேர்தல் அறிக்கை. தமிழக காங்கிரஸின் லட்சியங்களுக்கும், திட்டங்களுக்கும் செயல்வடிவம் கொடுக்கிற வகையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணி கொள்கை அடிப்படையில் அமைந்ததாகும். ஆனால், அ.தி.மு.க. தலைமையில் அமைந்துள்ளது சந்தர்ப்பவாத கூட்டணியாகும்.

தமிழக காங்கிரஸ் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் பொறுப்பை ஏற்று மிகச்சிறப்பாக பணியாற்றிய குழுவின் தலைவர் திரு எஸ். பீட்டர் அல்போன்ஸ், அமைப்பாளர் திரு.அமெரிக்கை வி. நாராயணன், ஒருங்கிணைப்பாளர் திரு.கே. சந்திரசேகர் மற்றும் குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**நாள்**: 15.03.2021

**- கே.எஸ். அழகிரி**

# இலட்சியங்களை வெல்வோம்!

சுதந்திர இந்தியாவின் வரலாற்றில், மிக முக்கியமான காலக் கட்டத்தில் தமிழ்நாடு சட்டப் பேரவை பொதுத் தேர்தலைச் சந்திக்க உள்ளது. நமது தேசமும், மாநிலமும் பல நெருக்கடிகளையும், சவால்களையும் ஒரே நேரத்தில் சந்திக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குத் தள்ளப்பட்டுள்ளன. பொருளாதார முடக்கம், மனித வாழ்க்கையை முடக்கிப் போட்ட கொடிய நோய்த் தொற்று, மக்கள் மத்தியில் பரஸ்பர நம்பிக்கையின்மையை வளர்த்தெடுத்துள்ள வெறுப்பு அரசியல், வரலாறு காணாத சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வு, அதிகாரத்திலுள்ளவர்களே ஜனநாயகத்தை, பெரும்பான்மைவாதமாக மாற்றச் செய்யும் சதிகள், மாநில உரிமைகள் பறிப்பு, தமிழ் மொழி மற்றும் கலாச்சாரச் சிதைவு, தட்பவெப்ப நிலை மாற்றத்தால் ஏற்படும் இயற்கைப் பேரிடர்கள் என்று பல முனைகளிலிருந்து வரும் தாக்குதல்களிலிருந்து தமிழகத்தைக் காப்பாற்றவும், தேசத்திற்கு நல்வழி காட்டவும் இந்தத் தேர்தல் முடிவுகள் பயன்பட வேண்டும்.

தனிமனித சுதந்திரத்திற்கும், சிறுபான்மை மக்களின் சமூக வாழ்வுக்கும், மனித உரிமைகளுக்கும், அடித்தட்டு மக்களின் நல்வாழ்வுக்கும் இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடிகளும், அச்சுறுத்தல்களும் முன்பு எப்போதும் இருந்ததில்லை.

இந்தச் சூழ்நிலையில் மதச்சார்பின்மை, சமூக நீதி, மாநில உரிமைகள், பரந்த ஜனநாயகம் ஆகியவற்றையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி - ஆகிய கொள்கைகளிலும், லட்சியங்களிலும் நம்பிக்கை கொண்ட சகோதர அரசியல் இயக்கங்களோடு காங்கிரஸ் பேரியக்கம், தோழமை கொண்டு கூட்டணி அமைத்து இந்த சட்டப் பேரவைத் தேர்தலைச் சந்திக்கிறது.

தமிழக அரசியலின் களயதார்த்தங்களைப் புரிந்து கொண்டு, சமகாலத் தேவைகளைக் கருத்தில் கொண்டு, இளைய சமுதாயத்தினரின் கனவுகளையும், லட்சியங்களையும் நெஞ்சில் தாங்கி, எதிர்காலத் தமிழகம் எப்படி இருக்க வேண்டும், அரசு நிர்வாகத்தில் யாருக்கு என்ன கிடைக்க வேண்டும் என்ற காங்கிரஸ் பேரியக்கத்தின் பார்வையினை, இங்கே தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் - 2021 சட்டப் பேரவைத் தேர்தல் அறிக்கையாகச் சமர்ப்பித்துள்ளோம்.

இந்த லட்சியங்களுக்கும், திட்டங்களுக்கும் செயல் வடிவம் கொடுக்க, சட்டப்பேரவைக்கு உள்ளேயும், வெளியேயும் இயன்ற அனைத்து முயற்சிகளையும் தமிழக காங்கிரஸ் மேற்கொள்ளும் என்று உறுதி கூறுகின்றோம்.

இந்தத் தேர்தல் அறிக்கையைத் தயார் செய்யும் பெரும் பொறுப்பை, எங்கள் மீது நம்பிக்கை வைத்து, எங்களிடம் வழங்கிய **அன்னை சோனியா காந்தி, இளம் தலைவர் ராகுல்காந்தி**, தமிழகப் பொறுப்பாளர் **திரு.தினேஷ் குண்டு ராவ்**, தமிழக காங்கிரஸ் தலைவர் **திரு. கே.எஸ்.அழகிரி** ஆகியோருக்கு எங்கள் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி - தேர்தல் அறிக்கைத் தயாரிப்புக் குழு

**எஸ். பீட்டர் அல்போன்ஸ்**
*தலைவர்*

**அமெரிக்கை வி. நாராயணன், கே.சந்திரசேகரன்**
*அமைப்பாளர் - ஒருங்கிணைப்பாளர்*

*உறுப்பினர்கள்:*

| | | |
|---|---|---|
| டாக்டர்.கே.ஜெயகுமார், எம்.பி., | டாக்டர். எம்.கே.விஷ்ணுபிரசாத். எம்.பி., | மயூரா. எஸ்.ஜெயகுமார் |
| மோகன் குமாரமங்கலம் | மாணிக்கம் தாகூர், எம்.பி., | சி.டி.மெய்யப்பன் |
| எஸ்.ஜோதிமணி எம்.பி., | கார்த்தி ப.சிதம்பரம், எம்.பி., | சி.ஆர்.கேசவன் |
| ஆ.கோபண்ணா | சசிகாந்த் செந்தில் | கே.தணிகாசலம் |
| ஏ.பி.சூர்யபிரகாசம் | ஜான் அசோக் வரதராஜன் | எஸ்.டி.நெடுஞ்செழியன் |
| லட்சுமி ராமச்சந்திரன் | இனியன் ராபர்ட் | எஸ்.எம்.இதயதுல்லா |
| இராம. சுகந்தன் | சி.அந்தோணி எஸ்.வி.விஜிலஸ் | தாரகை கத்பட் |

# பொருளடக்கம்


| எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | ஆட்சி நிர்வாகம் | 5 |
| 2. | உள்ளாட்சியில் நல்லாட்சி | 8 |
| 3. | வேலைவாய்ப்பு | 9 |
| 4. | தொழில் வளர்ச்சி | 11 |
| 5. | பூரண மதுவிலக்கு | 15 |
| 6. | போக்குவரத்து வசதிகள் | 15 |
| 7. | சிறுபான்மையினர் நலன் | 16 |
| 8. | மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் | 17 |
| 9. | மீனவர் நலன் | 19 |
| 10. | வேளாண்மை | 20 |
| 11. | நீர்மேலாண்மை | 24 |
| 12. | கல்வி - மாணவர் நலன் | 25 |
| 13. | மாற்றுத்திறனாளிகள் நலன் | 26 |
| 14. | கலை மற்றும் பண்பாடு | 26 |
| 15. | தொழிலாளர் - ஆட்டோ தொழிலாளர் நலன் | 27 |
| 16. | முதியோர் -ஓய்வூதியதாரர் நலன் | 29 |
| 17. | இந்து சமய அறநிலையத்துறை மேம்பாடு | 29 |
| 18. | பொது விநியோகத்திட்டம் சீரமைக்கப்படும் | 30 |
| 19. | தமிழகத்தை மின்மிகை மாநிலமாக்குவோம் | 31 |
| 20. | பொதுச் சுகாதாரம் | 32 |
| 21. | பட்டியலின மற்றும் பழங்குடியினர் நலன் | 33 |
| 22. | சுற்றுலா | 35 |
| 23. | நெசவாளர் நலன் | 36 |
| 24. | நீதித்துறையில் சீர்திருத்தங்கள் | 37 |
| 25. | காவல்துறையில் சீர்திருத்தங்கள் | 38 |
| 26. | பத்திரிகையாளர் நலன் | 38 |
| 27. | முக்கிய அம்சங்கள் | 39 |

# 1 ஆட்சி நிர்வாகம்

● தமிழக அரசின் அனைத்து மட்டங்களிலும் புரையோடிக்கிடக்கும் ஊழல் இன்று தமிழ்நாட்டை பெரும் அவலத்திற்குத் தள்ளியுள்ளது. குடிமக்களுக்கு, அவர்களது வரிப்பணத்தில் அரசு வழங்கும் அத்தனை சேவைகளுக்கும், திட்டங்களுக்கும் பகிரங்கமாக ‘விலைப்பட்டியல்’ வைத்து ஆட்சியாளர்கள் கொள்ளையடிப்பதுதான் ‘அரசு நிர்வாக தர்மம்’ என்று பெரும்பாலான மக்கள் ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு ஊழல் நியாயப்படுத்தப்பட்டுள்ளது.

● அரசின் சேவைகள், அரசு வழங்கும் மானியங்கள், இலவசங்கள், அரசுப் பணியாளர் மற்றும் ஆசிரியர் பணியிடங்கள், பணியிடமாற்றம், பொதுப்பணித்துறை / நெடுஞ்சாலைத்துறை, ஆற்றுமணல், கடற்கரை தாதுமணல், கருங்கல் கனிமவளம், அரசு கொள்முதல்கள், டாஸ்மாக் கொள்முதல், பொதுப்பணித்துறை / நெடுஞ்சாலை டெண்டர் போன்றவற்றில் அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் செய்யும் ஊழல் மற்றும் வாங்கும் கமிஷன் ஆண்டொன்றுக்கு லட்சம் கோடி ரூபாய் இருக்கும் என்று கூறி, அரசின் உள்வட்டத்திலிருக்கின்ற சில நேர்மையான அதிகாரிகள் வருந்துகின்றனர். இந்த மாபெரும் ஊழலைத் தடுக்கச் செய்யவும்,அதன் ஊற்றுக் கண்ணை அடைக்கவும் கீழே குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

● ஊழல் ஒழிப்பில் முதல்படி, அரசு நிர்வாகத்தின் வெளிப்படைத்தன்மை. இதனை உறுதி செய்யும் ஏற்பாடுகளையும், சட்டங்களையும், நிறுவனங்களையும் பலப்படுத்த வேண்டும். அன்னை சோனியா காந்தி அவர்களின் வழிகாட்டுதலில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு தகவல் அறியும் உரிமைச் சட்டம் என்ற சரித்திர சாதனையை நிறைவேற்றித் தந்தது.

● அரசு நிர்வாகத்தைப் பற்றிய அனைத்துத் தகவல்களையும் அனைத்துக் குடி மக்களும் பெறும் சட்டப்பூர்வமான உரிமையைப் பெற்றுத் தந்ததோடு மட்டுமல்லாமல், கேட்ட தகவலை வழங்காத அதிகாரிகளைக் கண்டிக்கவும் வகை செய்தது. மத்திய பாஜக அரசு இதில் சில திருத்தங்களைக் கொண்டு வந்து அந்தச் சட்டத்தின் கூர்மையை மழுங்கச் செய்துவிட்டது. இந்தச் சட்டத் திருத்தங்களை, உடனடியாகத் திரும்பப்பெற மத்திய அரசை வலியுறுத்துவோம்.

● இச்சட்டத்தின் பிரிவு-4, அரசின் ஒவ்வொரு துறையும் தங்கள் துறை சம்பந்தப்பட்ட பொதுத் தகவல்கள் அனைத்தையும் தங்களது இணையதளத்தில் உடனுக்குடன் வெளியிட வேண்டும் என்று சொல்லியிருப்பதைத் தமிழக அரசு முறையாகப் பின்பற்றுவதில்லை. ராஜஸ்தானின் காங்கிரஸ் அரசு ‘ஜன்சூச்னா போர்ட்டல்’ என்ற இணையதளத்தில் துறைவாரியாக அனைத்துத் தகவல்களையும் அன்றாடம் வெளியிடுவதைப் போலத் தமிழகத்திலும் ஏற்பாடு செய்யப்படும்.

● மத்திய அரசு வெளியிட்டுள்ள வழிகாட்டு நெறி முறைப்படி அரசு செய்யும் அனைத்து கொள்முதல்களைப் பற்றிய சகல தகவல்களையும் சம்பந்தப்பட்ட துறையின் இணையதளத்தில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும்.

● பிரிவு - 4 ன் கீழ் தகவல்களை வெளியிடுவதற்கு அதிகாரம் பெற்ற அலுவலர்களை உடனடியாக நியமித்து உத்தரவிடப்படும். தகவல் பெறுவதற்கான விண்ணப்பங்களை ஆன்லைன் மூலமாகவும் அனுப்ப ஏற்பாடு செய்யப்படும்.

● மாநில தகவல் ஆணையத்தில் வெளிப்படைத்தன்மையுடன் பலதுறைகளில் நிபுணத்துவம் பெற்ற நேர்மையாளர்களைக் கூடுதலாக நியமனம் செய்து அந்த ஆணையத்தின் செயல்பாட்டை மேம்படுத்துவோம்.

● தமிழக டெண்டர் சட்டத்தில் தற்போது இருக்கும் ஓட்டைகளை அடைக்க முறையான சட்டத்திருத்தங்கள் கொண்டுவரப்படும்.

● அதிமுக அரசில், அரசுத் துறைகள் சார்ந்த ஒப்பந்தங்களைப் பெறுவதில் அரசின் அதிகார மையங்களுக்கும் அவர்களின் பினாமிகளாகச் செயல்படும் சில ஒப்பந்தக்காரர்களுக்கும் இருக்கும் 'பாவக்கூட்டணியை' உடைத்தெறியும் வகையில் விதிகள் மாற்றியமைக்கப்படும்.

● தமிழ்நாடு, ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் - 1998 & தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள் ஆகியவற்றில் தேவைப்படும் மாற்றங்களை உடனடியாக செய்து, ஒப்பந்தப்புள்ளி கோரும் அத்தனை செயல்பாடுகளும் முழுமையாக ஆன்லைன் மூலம் நடைபெற ஏற்பாடு செய்யப்படும்.

● அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் - ஒப்பந்தக்காரர்கள் கூட்டணி அமைத்து, தேவையில்லாமல் ஒப்பந்தங்களைத் தொகுப்பது (packaging) முழுமையாக ஒழிக்கப்படும்.

● இந்த விதிகளுக்கு எதிராக, அரசுக்கு இழப்பு ஏற்படுகின்ற வகையில் விதிகளை வளைக்கும் அதிகாரிகள் மீது உடனடியாக ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

● ஒரு கோடி ரூபாய்க்குமேல் உள்ள அத்தனை ஒப்பந்தங்களும் மாநில ஊழல் தடுப்புக் கண்காணிப்பு அதிகாரிக்கு அனுப்பப்பட்டு, டெண்டர்கள் விதிகளின்படி உள்ளது என்று அவர்களால் சான்றளிக்கப்பட்டு இணையதளத்தில் அனைத்து விபரங்களுடனும் வெளியிடப்படும்.

● அரசின் கொள்கைகள் பரிசோதித்து அறியப்பட்ட அனுபவச் சான்றுகளின் அடிப்படையில் மட்டுமே வகுக்கப்படவேண்டும் (Evidence Based Policy Making) என்று காங்கிரஸ் கருதுகின்றது. இதன்மூலம் கொள்கைகளை வகுப்பதில் ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்த முடியும் என்று காங்கிரஸ் நம்புகிறது.

● ஒரு நீண்டகால, தொலைநோக்குப் பார்வை இல்லாமல் அவ்வப்போது தற்காலிகமாக எடுக்கப்பட்ட நிர்வாக முடிவுகள் பல நேரங்களில் மாநிலத்தின் கள யதார்த்தங்களைப் புறந்தள்ளி, வெளிநாட்டு மாதிரிகளைப் பார்த்துக் காப்பியடித்து முடிவுகள் எடுக்கப்படுகின்றன. அந்தத் தவறான அணுகுமுறையால், அரசின் கொள்கை முடிவுகளின் மீது பொதுமக்களுக்கு நம்பிக்கை ஏற்படுவதில்லை. அதனால், புதிய தொழில் நுட்பத்தின் உதவியுடன், ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்ட கொள்கைகளை உருவாக்கும் நேரம் வந்துவிட்டதைக் காங்கிரஸ் சுட்டிக்காட்டுகிறது. இதற்காக பொதுத் தகவல் சேகரிப்பு, பகுப்பாய்வு மற்றும் ஆராய்ச்சிக்குப் போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்படவேண்டும். அதன் அடிப்படையில் எடுக்கப்படும் முடிவுகள் ஒட்டுமொத்த சமூகத்தின் ஒத்துழைப்பை அரசின் நிர்வாகத்திற்குப் பெற்றுத் தரும். இப்படித் திரட்டப்படுகின்ற ஆதாரங்கள் மீது முடிவு எடுக்கும் அதிகாரம், மாவட்ட நிர்வாகங்களுக்கும் வழங்கப்படும்.

● மக்கள் அதிகம் பெறுகின்ற சேவைகள், அவர்களுக்கு அரசின் திட்டங்கள் மற்றும் சலுகைகளைப் பெறத் தேவைப்படும் சான்றிதழ்கள் போன்றவற்றை 'over the counter' மூலம் பெற்றுக்கொள்ளும் நவீன தொழில் நுட்ப வசதியைக் காங்கிரஸ் உருவாக்கும்.

● அரசு நிர்வாகம் அனைத்தையும் 'காகிதமற்ற நிர்வாகமாக' மாற்றக் காங்கிரஸ் நடவடிக்கை எடுக்கும். இந்த 'இ - நிர்வாகத்தின்' மூலம் பொதுமக்கள் அவர்கள் சம்பந்தப்பட்ட தகவல்களை எப்போதும் ஆன்லைனில் கண்காணிக்கமுடியும்.

● அரசின் சேவைகள் அனைத்தும் 'மொபைல் ஆளுமை' மூலம் வழங்கப்பட்டு, பொதுமக்கள் அரசு அலுவலகங்களின் வாயில்களில் காத்துக் கிடக்கின்ற சிரமங்களும்,காலதாமதமும் குறைக்கப்படும்.

● சென்னை மாநகராட்சியைத் தரம் உயர்த்துவோம்.

● சென்னை மாநகராட்சியின் மக்கள் தொகை ஒரு கோடிக்கும் அதிகமாகிவிட்ட நிலையிலும், பரப்பளவும் கிட்டத்தட்ட இரண்டு மடங்காகிவிட்ட நிலையிலும், நிர்வாக ரீதியில் மிகவும் சீர்கெட்ட நிலையிலேயே இருக்கிறது.

● கடந்த ஐந்து ஆண்டுகளாக, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல், அமைச்சர்களாலும் அவர்களின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கும் அதிகாரிகள் சிலராலும் மக்கள் அலைக்கழிக்கப்படும் நிலை உள்ளது.

● புதிய ஆட்சி அமைந்ததும், முதல் பணியாக மாநகராட்சித் தேர்தல் முறையாக நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

● சென்னையின் புறநகர்கள் பல சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி என்று பெயர் மாற்றம் செய்யப்பட்ட போதும், இணைக்கப்பட்ட புறநகர்களில் அடிப்படை வசதிகள் இன்னும் மேம்படுத்தப்படவில்லை.

● சாலை போடுதல், மழைநீர் கால்வாய், கழிவுநீர் கால்வாய் என்று எல்லாவற்றிலும் ஊழல் தலைவிரித்தாடுகிறது. இவற்றை முறையாகக் கண்காணிக்கவோ, நடவடிக்கைகள் எடுக்கவோ முறையான நிர்வாகம் செயல்படவில்லை.

● இவற்றைக் களைய, 15 மண்டலங்களாக உள்ள சென்னை பெருநகர மாநகராட்சி 4 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, அவற்றுக்குத் துணை ஆணையர்களாக ஐ.ஏ.எஸ்அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள். இவர்கள், அந்தப் பகுதிக்குட்பட்ட மண்டலங்கள் மற்றும் வார்டுகளில் நடைபெறும் பணிகளைக் கண்காணித்துச் செயல்படுத்துவார்கள்.

● வார்டுகளில் நடைபெறும் பணிகள் ஒருங்கிணைப்பு இல்லாததால், மழைநீர் கால்வாய் போன்ற பணிகள் ஆங்காங்கே விடுபட்டு, அதனால் மழைக் காலங்களில் வெள்ளம் ஏற்படுகிறது. எனவே, சிறு,சிறு துண்டுகளாக (பகுதிகளாக) இவற்றுக்கு டெண்டர் விடாமல், முழுமையான மாநகராட்சி அளவிலோ, அல்லது பகுதிவாரியாக டெண்டர் கோரப்பட்டு ஒருங்கிணைக்கப்படும்.

● அதேபோல, சென்னைக் குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் மற்றும் சி.எம்.டி.ஏ ஆகியவற்றின் சார்பிலும் ஒவ்வொரு பகுதியிலும் துணை ஆணையரின் கீழ் பொறுப்பு அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள். இதன்மூலம், ஒவ்வொரு பகுதியிலும் நடைபெறும் எந்த மக்கள் நலப்பணிகளும் முறையாகக் கண்காணிக்கப்படுவதோடு, விரைவாகவும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

● சாலை, குடிநீர், கழிவுநீர் மற்றும் அடிப்படை வசதிகள் மீது மக்களிடமிருந்து புகார் வந்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

● மேலும், மக்களின் அடிப்படை வசதிகளில் ஏதேனும் முறைகேடுகள் நடைபெற்றால், அதற்குக் குறிப்பிட்ட அதிகாரிகள் பொறுப்பேற்கவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு, முறைகேடுகள் நடைபெற்றால் உடனடியாக அந்த அதிகாரிகள் மீது பணிநீக்கம் உள்ளிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

# 2 உள்ளாட்சியில் நல்லாட்சி

● முன்னாள் பிரதமர் அமரர் ராஜிவ் காந்தி அவர்களின் பஞ்சாயத்து ராஜ் மற்றும் நகரபாலிகா சட்டத்தினுடைய வீச்சையும், தாக்கத்தையும் பலமுனைகளில் மாநில அரசு நீர்த்துப்போகச் செய்துவிட்டது. அமரர் ராஜிவ் காந்தி அவர்கள் கண்ட கனவை செயல்படுத்தும் வகையில், அனைத்து உள்ளாட்சிகளுக்கும் முறையான அதிகாரங்கள் மீண்டும் வழங்க, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

● அனைத்து நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கும் பொருந்தும் வகையில் நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொதுச் சட்டம் உடனடியாக உருவாக்கப்படும்.

● உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகளை மேம்படுத்தும், அவற்றின் செயல்பாடுகளில், தேவையற்ற அரசியல் சர்ச்சைகளைத் தவிர்க்கும் வகையிலும், கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட சமூக ஆர்வலர்கள், பொதுநலப் பணியாளர்கள், கல்வியாளர்கள் போன்ற சான்றோர்கள் உள்ளாட்சி நிர்வாகத்தில் பங்குபெற ஏதுவாகவும் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல்களையும் அரசியல்கட்சி சார்பின்றியும், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் சின்னங்களின் ஒதுக்கீடு இன்றியும் நடத்த, அரசியல் கட்சிகளின் கருத்தொற்றுமையின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

● ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு இன்னும் பலமாவட்டங்களில் தேர்தல்கள் நடத்தப்படவில்லை.தமிழகம் முழுவதும் மாநகராட்சிகள் உட்பட அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பல ஆண்டுகளாகத் தேர்தல் நடத்தப்படவில்லை. தேர்தல்கள் நடத்தப்படாத அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் உடனடியாக தேர்தல் நடத்தப்படும்.

● ஊழலாலும், ஆளுங்கட்சியினர் - மற்றும் அரசு அதிகாரிகளின் அதிகார துஷ்பிரயோகங்களாலும் சீரழிந்து கிடக்கும் ஊராட்சி மன்றங்களில், மண்டிக்கிடக்கும் தவறுகளை கண்டுபிடித்து பொது மக்கள் கேள்விகள் கேட்பார்கள் என்பதற்காக, அதிமுக அரசு ஏதாவது பொய்க் காரணங்கள் சொல்லி,கிராமசபைக் கூட்டங்களைக் கூட்டுவதைத் தவிர்த்து வருகிறது. ராஜிவ் காந்தி அவர்களின் நோக்கமே ஊராட்சி நிர்வாகத்தில் மக்கள் நேரடியாகப் பங்கேற்க வேண்டும் என்பதே. அந்த நோக்கத்தை நிறைவேற்றும் வகையில்,தேவையான விதிகள் உருவாக்கப்பட்டு இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கிராம சபைக் கூட்டங்கள் கூட்டப்படுவது கட்டாயமாக்கப்படும்.

● ஊரகப் பகுதிகளில் இருக்கின்ற கிராம சபைகளைப் போலவே,மாநகராட்சி மற்றும் நகராட்சிகளிலும் பகுதி சபைகள் மற்றும் வார்டு கமிட்டிகள் அமைக்கப்பட்டு மக்கள் நேரிடையாக மாநகராட்சி / நகராட்சி நிர்வாகங்களில் பங்கு பெறுவதற்கான உரிமைகளை அரசியல் சாசனச் சட்டத்திருத்தங்கள் உறுதிசெய்திருந்தாலும் தமிழ்நாட்டில்,மாநகராட்சியில் பகுதி சபைகளும்,நகராட்சிகளில் வார்டு கமிட்டிகளும் இதுவரை உருவாக்கப்படவில்லை. அந்த அமைப்புகளை உருவாக்க உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

● அமரர் ராஜிவ் காந்தி அவர்கள் கண்ட கனவின் படி, 'தன்னாட்சி பெற்ற உள்ளூர் அரசாங்கங்களாக' செயல்படவேண்டிய உள்ளாட்சி அமைப்புகளை, அதிமுக அரசு தங்களது சுயநலத்திற்காக,அரசு சொல்லும் வேலைகளைச் செய்யும் 'ஏவலாட்களின் கூடாரங்களாக' மாற்றிவிட்டது. ஊராட்சிமன்றங்களும்,கிராமசபைகளும் சேர்ந்து செய்யவேண்டிய சாலைப்பணிகளைக் கூட, அவர்களிடம் ஒப்படைக்காமல், பல உள்ளாட்சி அமைப்புகளின் பணியைத் தொகுத்துப் பல ஆயிரம் கோடிகளுக்கு உள்ளாட்சித்துறை அமைச்சகமே

டெண்டர் மூலம் ஏலம் விட்டதைச் சென்னை உயர்நீதிமன்றம் தடுத்து உத்தரவிட்டது அனைவரும் அறிந்ததே.

● கொரோனா காலத்தில்கூட ஊராட்சிகளுக்குக் கட்டாயமாகக் கொடுக்கப்பட வேண்டிய மாநில நிதிக்குழுவின் நிதியை மாநில அரசு விடுவிக்கவில்லை.ஒவ்வொரு ஆண்டும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படவேண்டிய நிதி ஒதுக்கீடுகள் முறையாகவழங்கப்பட்டு,அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுடன்,தன்னாட்சி பெற்ற உள்ளூர் அரசாங்கங்களாகச் செயல்படும் சூழ்நிலையை உருவாக்குவோம்.

● உள்ளாட்சி அமைப்புகளில் இட ஒதுக்கீட்டின் பயனாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்கள்,பட்டியலினத்தோர்,மலைவாழ் மக்கள் சார்ந்த மக்கள் பிரதிநிதிகளை, பல இடங்களில், சுதந்திரமாகச் செயல்பட அனுமதிக்காமல் முடக்கிவைக்கும் சம்பவங்கள் தொடர்ந்து நடந்துவருவதும், பல இடங்களில், அதிகாரிகளும் அதற்கு உடந்தையாக இருப்பதும்,நம்மைக் கவலைகொள்ளச் செய்கின்றன. ஒடுக்கப்பட்ட, விளிம்புநிலை சமூகங்களைச்சார்ந்த மற்றும் பெண் பிரதிநிதிகளின் சுதந்திரமான செயல்பாட்டை உறுதி செய்கின்றவரையில்,ஒவ்வொரு மாவட்டத்திலும்,மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் சிறப்புக் கண்காணிப்புக்குழு உருவாக்கப்படும்.

● உள்ளாட்சி அமைப்புகளுக்கான பொறுப்புகள், பணிகள், அதிகாரங்கள் இதுவரை அரசு ஆணைகளாகவே வழங்கப்பட்டு வருகின்றன. வரும்காலத்தில் சட்டங்களாக இயற்றப்பட்டு, சட்டப்படியான உரிமைகளாக மாற்றப்படும்.

● நிதி அமைச்சகத்திலிருந்து விடுவிக்கப்பட்ட 15 தினங்களுக்குள்,சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு மத்திய நிதிக்குழுவின் நிதி வழங்கப்படும்.மாநில ஆணைய நிதி,மத்திய ஆணைய நிதி,தொகுக்கப்பட்ட நிதி ஆகியவை மாநில கருவூலத்திலிருந்து சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்கு நேரிடையாக அனுப்பப்படும். மாநில நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும்போதே, அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதிப்பகிர்வு சம்பந்தமான தகவல்கள் முழுமையாகத் தொகுக்கப்பட்டு, தனி விளக்க அறிக்கையாகச் சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்படும்.

● 'உள்ளாட்சியில் தன்னாட்சி' என்ற அமரர் ராஜீவ் காந்தி அவர்களின் அற்புதக் கனவைச் செயல்படுத்த, அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

# 3 வேலைவாய்ப்பு

● திறமையும், வலிமையும், அர்ப்பணிப்பும் உள்ள இளைஞர்கள் தமிழகத்தில் பெருமளவில் இருக்கிறார்கள். இவர்களுடைய ஆற்றலையும், ஆர்வத்தையும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்படுத்துகிற அதே வேளையில், அவர்களுக்கான வேலைவாய்ப்புக்கு வழி செய்யும் வகையில், தமிழக மக்கள் முன்பு ஒரு புதிய திட்டத்தினை அறிமுகப்படுத்தக் காங்கிரஸ் கட்சி விழைகிறது.

● தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து மாவட்டங்களிலும், வருடம் ஒன்றுக்கு +2 படித்து தேர்ச்சி பெற்றுள்ள சிறந்த 500 இளைஞர்கள் – இளம்பெண்களைத்

தேர்ந்தெடுத்து அவர்களுக்கு உணவு மற்றும் உறைவிடமும் வழங்கி மூன்று ஆண்டுகளுக்குக் குடிமைப் பணிகள் பயிற்சி வழங்குவது, சட்டம் ஒழுங்கு பராமரிப்பு, போக்குவரத்து முறைப்படுத்துதல், தேசியப் பேரிடர் மீட்புப் பணிகளில் பயிற்சி, அடிப்படைக் குற்றவியல் சட்டங்கள், நீதிமன்ற நடவடிக்கைகள், சமூக நலப்பணிகள் போன்றவற்றில் போதிய பயிற்சிகளை அளித்து, மூன்றாண்டு பயிற்சிகள் முடிந்தவுடன், அவர்களைத் தமிழகக் காவல்துறையில் இரண்டாம் நிலைக் காவலர்களாகப் பணியமர்த்துவது. பயிற்சிக் காலங்களில் முதலாமாண்டு மாதம் ரூ. 1000/- இரண்டாமாண்டு ரூ. 2000/- மூன்றாமாண்டு ரூ. 3000/- உதவித்தொகை வழங்குவது என்ற புதிய திட்டத்தைக் காங்கிரஸ் செயல்படுத்த விழைகிறது.

● சமயத் திருவிழாக்கள், அரசு நிகழ்ச்சிகள், அரசு விழாக்கள் போன்ற பொது நிகழ்ச்சிகளில் பாதுகாப்புப் பணிக்கும், பேரிடர் காலத்தில் மீட்புப் பணிக்கும், குளம் வெட்டுதல், மரம் நடுதல், பாசன வசதிகளை மேம்படுத்துதல், அரசுப் பள்ளிகள் மற்றும் மருத்துவமனைகளில் இருக்கும் மருத்துவப் பணிகள் போன்ற சமூக நலப்பணிகளுக்கு அவர்களைப் பயிற்சிக் காலங்களில் பயன்படுத்தலாம். இந்த பயிற்சித் திட்டத்தின் மூலமாக ஆண்டுக்கு சுமார் 15 ஆயிரம் முதல் 18 ஆயிரம் இளைஞர்கள் - இளம்பெண்கள், மூன்று ஆண்டுக்கு சுமார் 50 ஆயிரம் இளைஞர்கள் - இளம்பெண்கள் அரசின் பொதுப் பணிக்கு எப்பொழுதும் தயாராக இருப்பதுடன், நல்ல பயிற்சி பெற்ற, விவரம் தெரிந்த, அர்ப்பணிப்புள்ள இளைஞர்கள் காவல்துறைக்குக் கிடைப்பர். ஏற்கெனவே, காவலர் பயிற்சிக்காக அரசிடம் இருக்கின்ற வசதிகளை விரிவுபடுத்தி, இத்திட்டத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

● இந்த இளைஞர்களைத் தேர்வு செய்யும் முறை குறித்தும், காவலர்களுக்கு அளிக்கவேண்டிய பயிற்சிகள் குறித்தும், அரசுக்கு ஆலோசனை வழங்க நிபுணர்கள் அடங்கிய ஒரு குழுவை அமைத்து ஆலோசனையைப் பெறலாம்.

● அதைப் போலவே, பட்டப்படிப்பு முடித்த 100 இளைஞர்களையும் - இளம்பெண்களையும் தேர்ந்தெடுத்து மூன்றாண்டுகளுக்கு அவர்களுக்கு அரசின் அனைத்துத் துறைகளிலும் சிறப்புப் பயிற்சி கொடுத்து, அதில் தேறியவர்களைக் காவல் துறையின் துணை ஆய்வாளர்களாகவும், கிராம நிர்வாக அதிகாரிகளாகவும் பணி நியமனம் செய்யலாம்.

● பயிற்சிக் காவலர்களுக்கு, உணவு மற்றும் உறைவிடம் வழங்குவது போல், இவர்களுக்கும் வழங்கி, அதைப்போலவே மூன்றாண்டுகளுக்கு உதவித்தொகையும் வழங்கலாம். இதன்மூலம் மூன்று ஆண்டுகளுக்குப் பின் 3,500 இளைஞர்களும் - இளம்பெண்களும் பொதுப் பணிகளுக்குத் தயாராக இருப்பார்கள். சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கவும், கிராமத்தில் அரசு நிர்வாகப் பணிகளைச் செய்யவும், ஒவ்வொரு ஆண்டும் முறையான பயிற்சி பெற்ற 3,500 இளைஞர்களும் - இளம்பெண்களும் கிடைப்பதால்,அரசு நிர்வாகத்தின் திறனை உயரவும், அனைத்து மாவட்டங்களைச் சார்ந்தவர்களுக்கும் சமமான அரசு வேலைவாய்ப்பு கிடைக்கவும் இத்திட்டம் வழிவகுக்கும்.

### மத்திய அரசின் வேலைவாய்ப்புகள்:

● மத்தியில் பாஜக ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு,மத்திய அரசின் வேலைவாய்ப்புகளில் தமிழகத்தைச் சார்ந்த இளைஞர்களும் - இளம்பெண்களும் பெருமளவில் புறக்கணிக்கப்படுவதாகச் செய்திகள் வருகின்றன. இராணுவம், ரயில்வே,மத்திய தொழில் பாதுகாப்புப் படை, தபால்,- தொலைப்பேசி துறை மற்றும் தமிழகத்திலுள்ள மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனங்கள் போன்றவற்றில் பெரும்பாலும் வடமாநிலங்களைச் சார்ந்தவர்களே பணியமர்த்தப்படுவதாக அறிகிறோம். இந்தநிலை தொடர்ந்தால், ஒரு கட்டத்தில் மத்திய அரசுப் பணிகளில் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்களே இல்லாமல் போய்விடுவார்கள் என்று அஞ்சுகிறோம். அத்தகைய நிலை ஏற்படாமல் இருக்க, மத்திய அரசுப் பணிகளில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு குறிப்பிட்ட அளவு இட ஒதுக்கீடு தரவேண்டும் என்று வலியுறுத்துவோம்.

மேலும், தமிழ்நாட்டில் இருக்கும் மத்திய அரசின் அலுவலகங்களில் பெரும்பாலும் வடமாநிலத்தவர்களே பணி அமர்த்தப்படுவதால், அந்த அலுவலகங்களுக்குச் செல்லும் தமிழ்நாட்டு மக்கள் மொழிப் பிரச்சினையால் பெரும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். எனவே,கூடுமானவரைத் தமிழ்நாட்டில் உள்ள மத்திய அரசு அலுவலகங்களில், தமிழில் எழுதவும்,பேசவும் தெரிந்தவர்களை மட்டுமே பணியமர்த்த வேண்டும். மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ( union public service commission) ஒரு பிரிவு, தென்மாநிலங்களின் தேவைக்காகச் சென்னையில் செயல்படவேண்டும்.

● அரசு வேலைவாய்ப்பில் தமிழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒதுக்கீடு.

● தமிழ்நாட்டில் படித்துவிட்டு வேலையின்றி வெளி மாநிலத்திற்கும், வெளி நாடுகளுக்கும் இடம் பெயர்வதும், வேலைவாய்ப்பின்றி தவிப்பதும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. வேலையில்லா திண்டாட்டம் அதிகரித்திருக்கும் நிலையில், தமிழகத்திலுள்ள அரசு வேலைகளில் வெளி மாநிலத்தவர் குறிப்பாக, வட மாநிலத்தவர் பணியில் அமர்த்தப்படுவது தொடர்கிறது.

● இதனைத் தவிர்க்க, தமிழக அரசுப் பணிகளிலும், தமிழகத்தில் உள்ள மத்திய அரசுப் பணிகளிலும் 74 சதவிகிதம் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கே ஒதுக்கப்படும் வகையில் தனிச் சட்டம் இயற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

# 4 தொழில் வளர்ச்சி

● பெருகிவரும் மக்கள் தொகை, அதிக வேலைவாய்ப்புகளின் தேவை மற்றும் சமூகத்தின் அணுகுமுறை மாற்றம் போன்ற புதிய சவால்கள், தொழில் வளர்ச்சியின் அவசியத்தை உணர்த்துகின்றன. விவசாயம் சார்ந்த பொருளாதாரத்தை, தொழில்சார்ந்த பொருளாதாரமாக மாற்றியமைக்க வேண்டும். தொழில் வளர்ச்சிக்கு, ‘முதலீடுகளின்’ அவசியத்தை, இன்று அனைத்து மாநிலங்களும் உணர்ந்திருப்பதால், முதலீடுகளைப்பெற இன்று பல மாநிலங்கள் போட்டி போட்டுக்கொண்டு, தங்கள் மாநிலத்திற்கு முதலீடுகளைப்பெற, உள்நாட்டு மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களுக்கு ஒவ்வொரு நாளும் பல சலுகைகளை அறிவித்துக் கொண்டிருக்கின்றன. மாநிலங்களுக்கிடையே இருக்கின்ற இந்த ஆரோக்கியமான போட்டியில், தமிழ்நாடு வெற்றி பெற்றால் தான் புதிய முதலீடுகளைப் பெற முடியும்.

● அதிமுக ஆட்சிக் காலத்தில், அரசின் தலைமைக்கும் பெருமுதலீட்டாளர்களுக்கும் இடையே உரையாடலும், சந்திப்புகளும் இல்லாமல் போனதால், கடந்த சில ஆண்டுகளில் பலபெரும் முதலீடுகளைத் தமிழகம் இழந்துவிட்டது. உலக முதலீட்டாளர்கள் மாநாடு என்று பெரும் விளம்பரம் செய்து, கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்பட்டதே தவிர, குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய எந்தப் பெருமுதலீடும் தமிழகத்திற்கு வரவில்லை. மத்தியில் டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள் பிரதமராகவும், மாநிலத்தில் டாக்டர் கலைஞர் அவர்கள் முதல்வராகவும் இருந்த காலம்தான் பெரும் முதலீடுகளைத் தமிழகம் பெறப்பட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது. 2006 - 2011ல் தமிழகத்தின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி, (GDP) 19:64%. 2011 -2016ல் 18.52 சதவீதமாக குறைந்து 2016-2020ல் 9.10 சதவீதமாக வீழ்ச்சி அடைந்துள்ளது. வீழ்ந்து கிடக்கும்

தமிழகத்தின் பொருளாதாரத்தைத் தூக்கிநிறுத்துவதுதான் நம் அரசின் முக்கியப் பணியாக இருக்கும்.

● தொழில் உற்பத்தியைப் பெருக்கிட, புதிய முதலீடுகளைப்பெற, தமிழக இளைஞர்களுக் குவேலைவாய்ப்புகளைப் பெற்றுத்தர, மாநில அரசுக்கு தகுந்த ஆலோசனைகள் வழங்க, அரசுத்துறைகள்,வங்கிகள் மற்றும் நிதிநிறுவனங்கள், தொழில் அதிபர்கள் மற்றும் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் அமைப்புகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழு உடனடியாக அமைக்கப்படும். அவர்கள் தருகின்ற அறிக்கையின் அடிப்படையில், செயல்திட்டங்கள் தயாரித்து நலிந்துகிடக்கும் தொழில்களை மீட்டெடுப்போம்.

● தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்களில், தொழில் துவங்க முன்வரும் தொழில் முனைவோருக்கு நிலம்,மின்சாரம் போன்ற தொழில் ஆதாரத் தேவைகளுக்கு, விலையில் சலுகையும் கட்டணத்தில் மானியமும் வழங்கப்படும்.

● குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்கு வரி விடுமுறை (Tax holiday) தரப்படும்.

● அந்தத் தொழில் நிறுவனங்கள் 75% உள்ளூர் தொழிலாளர்களைப் பணியமர்த்தினால், அவர்களது அடிப்படை ஊதியத்தில் 25% முதல் மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்படும். அதாவது, ஆண்டுக்கு ரூ. 25 லட்சத்திற்குக் குறையாமல் வழங்கப்படும்.

● பணமதிப்பிழப்பு நடவடிக்கை, தவறாக நடைமுறைப்படுத்தப்படும் ஜிஎஸ்டி, கடுமையாக அமல்படுத்தப்பட்ட கொரோனா ஊரடங்கு போன்ற தொழில்விரோத நடவடிக்கைகளின் காரணமாக,சிதிலமடைந்து கிடக்கும் சிறு, குறு தொழில்களைப் புனரமைக்கும் முயற்சிகள் உடனடியாக மேற்கொள்ளப்படும். ஊரடங்குகாலத்தில் அவர்களுக்கு ஏற்பட்ட கடன் வட்டிச் சுமையையும் மற்ற தொழில் சிரமங்களையும் நிவர்த்தி செய்வதற்குத் தேவையான ஆலோசனைகளைப் பெற,சம்பந்தப்பட்ட அனைவரின் பிரதிநிதிகள் அடங்கிய குழு நியமிக்கப்பட்டு, அதன் ஆலோசனையின் பேரில் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

● தொழிற்சாலைகளின் உற்பத்திக்குத் தேவைப்படுகின்ற மூலப்பொருட்களான சிமென்ட், இரும்பு, பருத்திநூல் போன்றவற்றின் உற்பத்தியாளர்கள் பல நேரங்களில் பாவக் கூட்டணி அமைத்து, தங்களது உற்பத்தியைக் குறைத்து செயற்கைத் தட்டுப்பாட்டை உருவாக்கிப் பொருட்களின் விலையை மிக அதிகமாகக் கூட்டுவதால், வேலைவாய்ப்புகளை உருவாக்கும் பல தொழில்கள் மூடப்பட வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இந்த ஏகபோக வணிகக் கொள்ளையைத் தடுத்து நிறுத்த, தற்போது சட்ட ரீதியான எந்த ஏற்பாடும் இல்லை. இதற்கான சட்டங்களை உடனடியாக இயற்றித்தர மத்திய அரசை வலியுறுத்துவோம். தேவையான மூலப் பொருட்கள் நியாயமான விலையில் விற்கப்படுகின்ற மாநிலங்களிலிருந்து நேரடியா கொள்முதல் செய்துகொள்ள, காலதாமதமின்றி தேவையான அனுமதி வழங்கப்படும்.

● புதிய தொழில்கள் துவங்கத் தேவைப்படுகிற அத்தனை அனுமதிகளையும் ஒரே முனையில் வழங்க ஒற்றைச்சாளர முறையை ஏற்படுத்துவதோடு, அனுமதி கேட்கப்பட்ட நூறு தினங்களுக்குள் கிடைக்காவிட்டால், அதற்கான காரணங்கள் தெரிவிக்கப்படாத நிலையில், அனுமதி வழங்கப்பட்டதாகக் கருதி (Deemed Approval) அவர்கள் தொழில் துவங்கலாம்.

● அனைத்துத் தொழிற்சாலைகளுக்கும் தரமான, தடையற்ற மின்சாரம் கிடைக்க ஏதுவாக, சிறப்பு மின் வழித்தடங்களும், தகுதியான துணைமின் நிலையங்களும், சக்திவாய்ந்த மின்மாற்றிகளும் உடனடியாக அமைத்துத் தரப்படும். தொழிற்பேட்டைகளிலும் தொழிற்சாலைப் பகுதிகள் என அறிவிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட இடங்களிலும், மின் இணைப்பு கேட்ட 15 தினங்களுக்குள் அந்த மின் இணைப்பு உண்டான நிர்ணயக் கட்டணத்திற்கான கேட்பு அறிவிப்பு தரப்பட வேண்டும். நிர்ணயக் கட்டணம்

செலுத்தப்பட்ட 15 தினங்களுக்குள் மின் இணைப்பு வழங்குவதற்குண்டான உத்தரவு பிறப்பிக்கப்படவேண்டும். தகுந்த காரணமின்றி இக்கால வரம்புகளுக்குள் மின் இணைப்புத் தரத்தவறினால்,சம்பந்தப்பட்ட மின் துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

● மாநில தொழில் வளர்ச்சி மேலாண்மைக் குழு ஒன்று முதலமைச்சரின் தலைமையில் அமைக்கப்படும். தொழில் முனைவோர், நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகள், தொழிலாளர்களின் பிரதிநிதிகள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், சம்பந்தப்பட்ட துறைகளின் அமைச்சர்கள் - அரசுச் செயலர்கள் ஆகியோர் அடங்கிய இக்குழு,குறைந்தது மூன்று மாதத்திற்கு ஒருமுறை கூடி, தொழில் வளர்ச்சி, தொழிலாளர் நலன், சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற அனைத்துப் பிரச்சினைகளையும் விவாதித்து, நடைமுறைப்படுத்த வேண்டிய செயல்திட்டங்களை அரசுக்குப் பரிந்துரை செய்யும்.

● அரசாங்கக் கொள்முதல்களில் சிறு, குறுதொழில்களுக்கும், தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும். அப்படிப்பட்ட தயாரிப்புகள் இல்லாத சூழ்நிலையில்தான் வெளிக்கொள்முதல்கள் அனுமதிக்கப்படும்.

● குடிசைத் தொழில்கள், மண்ணின் மணம் கமழும் பாரம்பரியத் தொழில்கள், மரபுவழித் தொழில்கள் போன்ற தமிழ்நாட்டுக்கே உரிய பாரம்பரியத் தொழில்கள் அடையாளம் காணப்பட்டு, அவற்றில் பணியாற்றும் தொழிலாளர்களும் கணக்கெடுக்கப்பட்டு, அந்தத் தொழில்களைப் பாதுகாக்கவும், அதில் புதிய தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்தவும், அவர்களின் தயாரிப்புகளுக்கு புதிய சந்தைகளை உருவாக்கவும் தேவையான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

● கனிம வளங்கள், இயற்கைத் தமிழகத்திற்குத் தந்த பெரும் செல்வம். ஒடிசா, சத்தீஷ்கர் போன்ற மாநிலங்களில், கனிமவளம் அந்த மாநிலங்களுக்குப் பெரும் வருவாயை ஈட்டித்தந்துள்ளபோது, தமிழகத்தில் மட்டும் அத்துறையில் மலிந்துள்ள ஊழலின் காரணமாக, சில தனிநபர்களின் வேட்டைக்காடாக காட்சியளிக்கிறது. உலகின் மிகச் சிறந்த கிரானைட் படிமங்கள், கடற்கரைகளில் கொட்டிக்கிடக்கும் தாதுமணல், கோவை – நாமக்கல் - ஈரோடு போன்ற மாவட்டங்களில் படிந்துள்ள பிளாட்டினம் போன்ற அரியவகை உலோகத் தாதுகள்,தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்பட,சிறப்பான கொள்கைகளும், விதிகளும் உருவாக்கப்பட்டு, ஊழல் அதிகாரிகள் களையெடுக்கப்பட்டு, ஊழல் களையப்படும். அதன்மூலமாக அரசின் வருவாய் அதிகரிக்கப்படும்.

● தமிழகத்தில் இயங்கும் கரும்பாலைகளில் இருக்கும் எத்தனால் உற்பத்தித் திறனைப் பயன்படுத்துகின்ற வகையில், கூடுதல் எத்தனால் உற்பத்திக்கு அரசு அனுமதி வழங்கும்.

● ரப்பர் தொழிற்சாலைகள், தோல் பொருட்கள் தயாரிப்பு, வார்ப்படத்தொழில் (Foundries), கோழிப்பண்ணை, வண்ண மீன் வளர்த்தல், உணவுப் பொருட்கள் பதப்படுத்துதல், பழக்கூழ் தயாரித்தல், பின்னலாடை மற்றும் டை தயாரிப்பு, சாயப்பட்டரைகள் போன்ற தொழில்களுக்கு இருக்கின்ற சிரமங்களும், நெருக்கடிகளும் களையப்பட்டு, இத்தொழில்கள் சிறப்பாகச் செயல்படவேண்டிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

**சிறு, குறு, நுண் தொழில்முனைவோர் நலன்**

● 1960 லிருந்து 1967 வரை தமிழகத்தின் பல பகுதிகளில் பெரும் தொழில் பேட்டைகள் துவங்கப்பட்டன. கிண்டி,அம்பத்தூர், திருமழிசை மற்றும் பல மாவட்டங்களில் துவங்கப்பட்ட இந்த தொழில்பேட்டைகள்தாம் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு

அடிப்படையாக இருந்தது. இப்போதும் அந்த தொழில்பேட்டைகளில் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். ஆனால் இப்பெரும் தொழில் மையங்களில் பல பராமரிப்பின்றி சீரழிந்த நிலையில் இருக்கின்றன. அவைகள் சீரமைக்கப்பட்டு, சாலைகள் குடிதண்ணீர் போன்ற அடிப்படை வசதிகள் உடனடியாக செய்து தரப்படும்.

● மாநில அரசின் டெண்டர்களில், 100 கோடி வரை உள்ள கொள்முதல்கள், தமிழகத்தில் நிறுவப்பட்டுச் செயல்படும் தமிழக அரசின் சிறு, குறு நிறுவனச் சான்று பெற்ற, சிறு, குறு, நுண் தொழில் முனைவோர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும். இதன்மூலம் தமிழகத்திலுள்ள தொழில் முனைவோர் பயன்பெறுவதோடு, வேலைவாய்ப்பும் அதிகரிக்கும்.

● பணமதிப்பிழப்பு, குளறுபடியான ஜி.எஸ்.டி மற்றும் கொரோனா தாக்கம், இவற்றால் பாதிக்கப்பட்ட சிறு, குறு தொழில்கள் மீண்டு வர, அடுத்த மூன்று வருடங்களுக்கு, சிறு, குறு, நுண் தொழில் முனைவோர்கள், தங்கள் தொழிலுக்காக, வங்கிகளில் பெற்ற கடனுக்காகச் செலுத்துகின்ற வட்டியில், 50 சதவிகிதத்தைத் தமிழக அரசு மானியமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

● ஏற்றுமதி செய்வதற்கான வழிமுறையை எளிதாக்கி ஊக்குவிப்பதற்கும், அதன்மூலம், சிறு, குறு தொழில் முனைவோர் பயன் பெறவும், அதனால், அரசுக்கும் அன்னியச் செலாவணி அதிகரிக்கும் என்பதை மனதில் கொண்டு, ஏற்றுமதியில் ஈடுபடும் அனைத்து உள்ளூர் நிறுவனங்களுக்கும் வெளிநாடுகளில் அல்லது இந்தியாவுக்குள் நடைபெறும் 4 வர்த்தகக் கண்காட்சிகளில் பங்கேற்பதற்கான செலவில் 50% தமிழக அரசு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

● மூலப்பொருளின் அதிகமான விலை மற்றும் பற்றாக்குறையைச் சிறு, குறு தொழில் முனைபவர்கள் எதிர்கொள்கின்றனர். இதனால், சரியான மூலப்பொருள் உரிய நேரத்தில் கிடைக்காமலும், அவ்வப்போது ஏற்படும் விலையேற்றத்தினாலும், சரியான நேரத்தில் ஆர்டர்களை முடிக்க முடியாமலும், எதிர்பார்க்கப்படும் லாபத்தை அடைய முடியாமலும் சிரமத்திற்குள்ளாகிறார்கள். இதைச் சரி செய்ய, தமிழகத்தில் அமைந்துள்ள அனைத்து MSMEக்கும் மாநில அரசின் சிட்கோ மூலம், ரேசன் / PDS முறையில், மூலப் பொருட்களைச் சரியான விலையில், வழங்குவதன்மூலம் MSME நிறுவனங்கள் மீண்டெழமுடியும். இதனை எப்படி நடைமுறைப்படுத்துவது என்பது குறித்து, சிட்கோ அதிகாரிகள் மற்றும் சிறு, குறு தொழில் முனைவோர் பிரதிநிதிகள் அடங்கிய குழு அமைக்கப்பட்டு அந்தக் குழுவின் பரிந்துரைகள் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

● மாநில அரசின் டெண்டர்களில் 100 கோடிக்கு மேல் உள்ள கொள்முதல்களைத் தமிழகத்தில் நிறுவப்பட்டுச் சிறு,குறு தொழில் முனைவோர்களுக்கு மட்டுமே கொடுக்கப்படவேண்டும். இதில் 50 முதல் 100 கோடி வரை உள்ள டெண்டர்களை சிறு தொழில் முனைவோர்களுக்கு, 10 முதல் 50 கோடி வரையிலான டெண்டர்களை குறு தொழில்முனைவோர்களுக்கு, 10 கோடி வரையிலான டெண்டர்களை நுண் தொழில் முனைவோர்களுக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டும்.

# 5 பூரண மதுவிலக்கு

● தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சி இருந்த வரையில் சமரசமில்லாத மதுவிலக்குக் கொள்கை அமலில் இருந்தது.

● அப்போதைய அரசு வருமானம் நூறு கோடி ரூபாய்க்குக் குறைவாக இருந்தபோது, மதுவிலக்கு அமல்படுத்தப்பட்டது. இன்று தமிழக அரசின் வருமானம் ஒரு லட்சத்து 33 ஆயிரம் கோடி ரூபாயாக இருக்கும் போது மதுவிலக்கு அமல்படுத்துவதற்குத் தயக்கம் தேவையில்லை.

● தமிழகத்தில் புதிய அரசு பதவியேற்றதும் பூரண மதுவிலக்கை அமல்படுத்தப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், அதனால் கள்ளச்சாராயம் பெருகாமல் தடுக்கவும், மது விற்பனையால் வரும் வருவாய் இழப்பைச் சரிசெய்ய எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்ந்து முடிவெடுக்க, நிபுணர்கள், அதிகாரிகள் கொண்ட உயர்மட்டக்குழு அமைக்கப்படும்.

● பூரண மதுவிலக்கு அமல்படுத்தப்படும்வரை, சிறிது சிறிதாக மதுக்கடைகளின் எண்ணிக்கை குறைக்கப்படும்.

● குடியால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சை அளிக்க ஒவ்வொரு தாலுக்கா அளவில் ஒரு மறுவாழ்வு சிகிச்சை மையம் அமைக்க ஆவன செய்யப்படும்.

● பள்ளி, கல்லூரிப் பாடப்புத்தகங்களில் மதுவின் தீமைகள் குறித்த பாடங்கள் இடம்பெற ஆவன செய்யப்படும்.

● கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களுக்கு மிகக் கடுமையான தண்டனைகள், மிக விரைவாக வழங்க ஆவன செய்யப்படும்.

● கள்ளச்சாராயம் காய்ச்சப்பட்டால் அதற்கு உள்ளூர் கிராம நிர்வாக அலுவலர், காவல் துறை ஆய்வாளர், பஞ்சாயத்துத் தலைவர் போன்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்க ஆவண செய்யப்படும்.

● மதுவிலக்குத் துறைக்குத் தனி அமைச்சகம் அமைக்கப்படும்.

● தேசிய அளவில் மதுவிலக்குக் கொள்கை அமல்படுத்தப்பட தமிழக அரசு குரல் கொடுக்கும்.

# 6 போக்குவரத்து வசதிகள்

● காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் துவங்கப்பட்டு, மிகச் சிறப்பாகச் செயல்பட்டு, தமிழக அரசு நிர்வாகத்தின் பெருமைக்குரிய அடையாளமாக இருந்த அரசுப் போக்குவரத்து நிறுவனங்கள், இன்று நிர்வாகச் சீர்கேட்டிற்கும், ஊழலுக்குமான உதாரணமாக மாறிப்போனது தமிழ்நாட்டின் துரதிருஷ்டம். இன்று இருக்கும் அரசுப் போக்குவரத்துக் கழகங்களால், அரசுக்கு ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்கள் இழப்பு ஏற்படுவதோடு

மட்டுமல்லாமல்,பொதுமக்களுக்கும், கழகங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கும் பெரிய பயன் ஏதுமில்லை என்ற நிலையில் உள்ளது.

● அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் நிர்வாகச் சீர்கேடுகளை ஆய்ந்து சீரமைப்பதற்கான நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்ய 1990- ம் ஆண்டு அமைக்கப்பட்ட "தில்லைநாயகம் குழு" பரிந்துரையைச் சமர்ப்பித்து இருபத்தைந்து ஆண்டுகளாகியும், இதுவரை எந்த முறையான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தில்லைநாயகம் குழுவின் அடிப்படையில், தற்போது உள்ள புதிய தொழில்நுட்பங்கள், சூழ்நிலை மாற்றங்கள் ஆகியவற்றையும் கருத்தில் கொண்டு, அரசுப் போக்குவரத்துக்கழகங்களின் செயல்பாடுகளை மேம்படுத்தி, வருவாய் இழப்புகளைச் சரிசெய்யவும், பொதுமக்களுக்கும், தொழிலாளர்களுக்கும் பயன் ஏற்படுகின்ற வகையில், கழகங்களின் நிர்வாகத்தினை மேம்படுத்தவும் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

● போக்குவரத்தின் பயன்பாட்டு அடிப்படையில், முக்கியமான பேருந்து நிலையங்கள் அடையாளம் காணப்பட்டு, அவைகளின் தரம் உயர்த்தப்பட்டு, அங்கு ஆண் - பெண் பயணிகளுக்கு, தனி குளியல், கழிப்பிட வசதிகள் உருவாக்கப்படும். தினசரி 100 பேருந்துகளுக்கு மேல் வந்து செல்லும் பேருந்து நிலையங்களில் WiFi வசதி செய்து தரப்படும்.

● மாநகரங்களில், மகளிர் / மாணவர்களுக்கான சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுவதோடு அவைகளில் 'மாற்றுத் திறனாளிகளுக்கான' தனி வசதிகளும் செய்யப்படும்.

● விருப்ப ஓய்வுபெறும் போக்குவரத்துக்கழக தொழிலாளர்கள், படித்துவிட்டு வேலை இல்லாமல் இருக்கும் இளைஞர்கள் ஆகியோரை உறுப்பினர்களாக் கொண்ட, 'கூட்டுறவுப் போக்குவரத்து சங்கங்கள்' உருவாக்கப்பட்டு அந்த சங்கங்களுக்கு மினி பேருந்து உரிமங்களும், பேருந்துகள் ஓடாத புதிய வழித்தடங்களில் பேருந்துகளை இயக்க உரிமங்களும் வழங்கப்பட்டு, அப்பேருந்துகளை வாங்கி இயக்கத் தேவைப்படும் கடன் வசதிகளையும் அரசு ஏற்பாடு செய்யும்.

● காரணங்கள் இன்றியும், வரைமுறை இல்லாமலும் உயர்த்தப்பட்ட போக்குவரத்துக் கட்டணங்கள் சீரமைக்கப்பட்டு, தமிழகம் முழுவதும் பயண தூரத்தின் அடிப்படையில் தகுந்த கட்டணம் நிர்ணயிக்கப்படும்.

● அரசுப் போக்குவரத்துக்கழக பேருந்துகளால் விபத்துகளுக்கு உள்ளாகும் நபர்களுக்கு, நீதிமன்றங்கள் இழப்பீட்டுத் தொகைகள் வழங்கி தீர்ப்பளித்த பின்பும் கூட போக்குவரத்துக் கழகங்களின் நிதி வருவாய்ப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்ட பலருக்கு இழப்பீட்டுத் தொகைகள் வழங்கப்படாமல், பொதுமக்கள் பெரும் சிரமத்திற்குத் தள்ளப்பட்டுள்ளனர். அந்த காப்பீட்டுச் சட்டங்கள் திருத்தப்பட்டு, புதிய 'நிதியம்' உருவாக்கப்பட்டு தாமதமின்றி இழப்பீட்டுத் தொகைகளை வழங்க அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.

# 7 சிறுபான்மையினர் நலன்

● மதம்,சாதி,மொழி ஆகியவற்றின் பெயரால் யாரையும் வேற்றுமைப்படுத்தவும், பேதங்கள் செய்யவும், குறைத்து மதிப்பிடவும் காங்கிரஸ் ஒரு நாளும் அனுமதிக்காது. மதநல்லிணக்கத்திலும், சமூக உறவுகளிலும், மனிதநேயப் பண்பாட்டிலும் ஊறி வளர்ந்துள்ள தமிழகத்தை 'பெரும்பான்மைவாதத்தின்' வேட்டைக்காடாக மாற்ற பாஜகவும் அதன்

கூட்டணிக் கட்சிகளும் தீட்டுகின்ற சதித் திட்டங்களை முறியடிக்கக் காங்கிரஸ் தனது அரசியல் சக்தி முழுமையையும் பயன்படுத்தும்.

● மதம், சாதி, மொழிச் சிறுபான்மையினர், தமிழகத்தில் மாண்புடன் வாழ்ந்து, தங்களது ஆன்மீக, கலாச்சார, அரசியல் உரிமைகளை, எத்தகைய அச்சுறுத்தலும் இன்றி, பரிபூரணமாக அனுபவிக்க, காங்கிரஸ் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

● சிறுபான்மை ஆணையத்தின் சிறப்பான செயல்பாடுகளுக்குத் தேவைப்படுகின்ற அனைத்து அதிகாரங்களும் சட்டப்பூர்வமாக உரிமைப்படுத்தி வழங்கப்படும்.

● சிறுபான்மை மக்களின் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளுக்காக, இந்திய அரசியல் சாசனச் சட்டப் பிரிவுகள் 15, 16, 25, 26, 28, 29 மற்றும் 30 வழங்கியுள்ள அத்தனை உரிமைகளும் அவர்களுக்குச் சேதமின்றிக் கிடைப்பதைக் காங்கிரஸ் உறுதி செய்யும்.

● அதைப்போலவே, அரசியல் சாசனச் சட்டப் பிரிவுகள் 15,16,29, மற்றும் 30ன் படிமொழிச் சிறுபான்மையினருக்கு அத்தனை உரிமைகளும் கிடைப்பதற்குக் காங்கிரஸ் உறுதி செய்யும்.

● மதம், சாதி, மொழி ஆகியவற்றின் அடிப்படையில் மக்களைப் பிரித்து, அவர்கள் மத்தியில் துவேஷத்தையும், வெறுப்பையும் வளர்க்க நடவடிக்கை எடுக்கும். நபர்கள் மீது காவல்துறைக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். அந்த நடவடிக்கைகளில் அரசியல் தலையீட்டைக் காங்கிரஸ் ஒருநாளும் அனுமதிக்காது.

● மேலே சொல்லப்பட்டுள்ள வெறுப்புக் குற்றங்களைத் தடுக்கவும், சமூகப் பதற்றங்களை ஏற்படுத்துகிறவர்கள் மீது தகுந்த நடவடிக்கைகள் எடுக்கவும், ஒரு தனிச் சட்டத்தை இயற்றி அதனை நிறைவேற்றிடத் தகுந்த நிறுவன அமைப்புகளையும் காங்கிரஸ் உருவாக்கித்தரும்.

● மதச் சிறுபான்மையினராக இருக்கின்ற இசுலாமியருக்குத் தனி இட ஒதுக்கீடு தந்திருப்பது போல, தமிழகத்தில் வாழும் மொழிச் சிறுபான்மையினருக்கும் தகுந்த விழுக்காடு இட ஒதுக்கீடு கிடைப்பதற்குக் காங்கிரஸ், அதன் தோழமைக் கட்சிகளைக் கலந்து, வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ளும்.

● சிறுபான்மை மக்களுக்கு அறிவிக்கப்படுள்ள இட ஒதுக்கீடுகள், கல்வி உதவித்தொகை மற்றும் அரசின் திட்டங்கள் அவர்களுக்குக் கிடைக்கிறதா என்பதை உறுதிசெய்து, முறையான களத்தணிக்கைக்குப் பின் மூன்று மாதத்திற்கு ஒருமுறை அரசுக்கு அனுப்பி வைக்க மூத்த அதிகாரிகள் அடங்கிய ஒரு குழு அமைக்கப்படும்.

● ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சிறுபான்மையினர் நலன் ஆகிய மூன்று துறைகளும் முதலமைச்சருடைய துறைகளாக அவரது நேரடிக் கட்டுப்பாட்டில் நிர்வகிக்கப்பட வேண்டும் என்று காங்கிரஸ் விரும்புகிறது அதனைக் காங்கிரஸ் வலியுறுத்தும்.

# 8 மகளிர் மற்றும் குழந்தைகள் நலன்

● கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் பெண்களுக்குச் சம உரிமை வாய்ப்பு வழங்கப்படும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

● பெண் கல்வியை ஊக்குவிக்கும் வகையில், வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பத்திலிருந்து வரும் பெண்களுக்கு உயர்கல்வி பயில அவர்களுக்கான கல்விக் கட்டணத்தை அரசே செலுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

● உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின் படி அரசு, தனியார், வியாபார நிறுவனங்கள் மற்றும் பள்ளி, கல்லூரிகளில் பெண்களுக்கு எதிராக நடைபெறும் பாலியல் குற்றங்களைத் தடுக்கும் விதமாக, 'விசாகா கமிட்டி' அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

● பெண்களுக்கு எதிராக நடைபெறும் பாலியல் வன்கொடுமை மற்றும் அனைத்து விதமான வன்கொடுமைக்குற்றங்களை விசாரிக்க, அனைத்து மாவட்டங்களிலும் விரைவு தனிச் சிறப்பு நீதிமன்றங்கள் அமைத்து வழக்குகளை 6 மாதத்திற்குள்ளாக விசாரித்து நீதி வழங்க ஆவன செய்யப்படும். வழக்கு நடைபெறும் காலக் கட்டத்தில், பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மருத்துவ உதவி, மனநல ஆலோசனை, பயணப்படி மற்றும் தேவைப்படும் உதவிகள் வழங்கப்படும்.

● முதியோர் உதவித் தொகை ( OAP ) மற்றும் விதவைகள் உதவித் தொகை ரூ. 3,000/- உயர்த்தி வழங்கப்படும்.

● பெண்கள் பெயரில் பதிவு செய்யப்படும் சொத்துக்களுக்கு, மத்திய அரசு வசூலிக்கும் பத்திரப் பதிவுக் கட்டணம், 7 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாகக் குறைக்கவும், மாநில அரசின் பத்திரப் பதிவுக் கட்டணம், 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகக் குறைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

● சட்டப் பேரவைகளிலும், நாடாளுமன்றத்திலும் பெண்களுக்கு 33 சதவிகிதம் இட ஒதுக்கீடு சட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசை வலியுறுத்துவோம்.

● அனைத்துப் பள்ளி, கல்லூரிகளில் பயிலும் மாணவிகள் பயன்பெறும் வகையிலும், பெண்கள் பயன்படுத்தும் பொதுக் கழிப்பிடங்களிலும், தானியங்கி நாப்கின் வழங்கும் இயந்திரம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

● பெண்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும், தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளவும், அனைத்து பள்ளி மற்றும் கல்லூரிகளில் தற்காப்புப் பயிற்சியை ஒரு கட்டாயப் பாடமாக வைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

● தி.மு.க ஆட்சிக் காலத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவம் பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளது. மகளிர் சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், அதன் மூலம் பெண்களின் பொருளாதார நிலை மேம்படவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

● குழந்தைகள் மீது தொடர்ந்து வன்முறைகள் அதிகரித்துக் கொண்டு வருவதால், குழந்தைகள் பாதுகாப்புக்கு என்று தனித்துறை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

● மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம், தனி அந்தஸ்து மற்றும் முழுக்கட்டமைப்புகள் கொண்ட அமைப்பாக இயங்க வழிவகை செய்யப்படும்.

● அனைத்து மாவட்டங்களிலும் குழந்தைகள் மீது நடக்கும் பாலியல் வன்முறைகளைத் தடுப்பதற்கு என்று சிறப்பு நீதிமன்றங்கள் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

● குழந்தைகள் மீது நடக்கும் பாலியல் வன்முறை மற்றும் பிற வன்முறைகளைத் தடுப்பதற்கு, குழந்தை உரிமைக் கல்வி, பாலின சமத்துவம், பாலின நீதி மற்றும் வாழ்க்கைத் திறன் கல்வி போன்றவை அனைத்துப் பள்ளிகளிலும், இருபாலினக் குழந்தைகளுக்கும் நடைமுறைப்படுத்த வழிவகை செய்யப்படும்.

● அனைத்துப் பள்ளிகளிலும் முழுநேர மன நல ஆலோசகர்கள் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

● கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தைப் பன்னிரண்டாம் வகுப்பு வரை நீட்டிப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

● அரசு உயர் கல்வி நிறுவன வேலை வாய்ப்புகளில், அரசுப் பள்ளியில் படித்து வருபவர்களுக்கு, 50 விழுக்காடு ஒதுக்கப்பட வழிவகை செய்யப்படும்.

● போக்சோ சட்ட அமலாக்கத்தைக் கண்காணிப்பதற்கு என்று மாவட்ட அளவில் தனி அமைப்புகள் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்..

● குழந்தைகளுக்கான பாதுகாப்பு அமைப்புகள், மாநில மற்றும் மாவட்ட அளவில் உள்ளது. இதில் குழந்தை உரிமை மற்றும் குழந்தைப் பாதுகாப்பில் நிபுணத்துவம் பெற்றவர்கள் மட்டுமே நியமிக்கப்பட வலியுறுத்தப்படும். மேலும், குழந்தைப் பாதுகாப்பு அமைப்புகள் ஏதாவது குழந்தை மீது வன்முறை நடந்தால் மட்டுமே பார்க்கிற அமைப்பாக இல்லாமல், தடுப்பு நடவடிக்கைகளையும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்கும் அமைப்புகளாகவும் செயல்பட வழிவகை செய்யப்படும்.

# 9 மீனவர் நலன்

● சுருங்கி வரும் மீன்வளம், மிக அதிகமான மீன் பிடிப்பு, கடல் எல்லைகளில் அண்டை நாட்டுக் கடற்படையினரின் நெருக்கடி, புவி வெப்ப மயமாதல், மாறிவரும் தட்பவெப்ப சூழ்நிலைகளால் அடிக்கடி கடலில் ஏற்படும் இயற்கைச் சீற்றங்கள் போன்ற பல காரணங்களாலும், மீனவர்களின் வாழ்க்கையும், வாழ்வாதாரங்களும் மிகப் பெரும் நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. வல்லரசாகிவிட்டோம் என்று மார்தட்டிப் பெருமைப்படும் இந்தியாவால், இயற்கைச் சீற்றத்தின்போது, கடலில் சிக்கித் தவிக்கும் மீனவர்களைக் காப்பாற்ற முடியவில்லை. நாம் பெற்றிருக்கின்ற மிகப் பெரிய தொழில் நுட்ப வளர்ச்சியும், அவர்களுக்கு உதவவில்லை. உலகின் மிகப் பெரிய ராணுவம் என்று நாம் பெருமைப்பட்டுக் கொள்ளும் நமது ராணுவத்தாலும்,அதன் கடற்படையாலும் நமது மீனவர்களின் உயிருக்கும், உடைமைகளுக்கும் பாதுகாப்பு கொடுக்க முடியவில்லை. இவ்வாறு பலமுனை தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கும் தமிழக மீனவர்களின் வாழ்வையும்,வாழ்வாதாரங்களையும் மீட்டெடுத்து அவர்களை மாண்புடன் வாழவைக்கத் தமிழக காங்கிரஸ் சபதமேற்கிறது. அதற்காகக் கீழ்க்கண்ட வாக்குறுதிகளைத் தருகிறோம்.

● மண்டல் கமிஷன் பரிந்துரையின்படி கடற்கரை மற்றும் உள்நாட்டு மீனவர்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க மத்திய அரசை வலியுறுத்துவோம்.

● கடற்கரையை ஒட்டி மீனவர்கள் வாழும் மீனவ கிராமங்களையும், அவர்களது தொழிலுக்குத் தேவைப்படுகின்ற வலை உலர்த்தும் /படகுகளை நிறுத்தும்/ பிடித்த மீன்களை விற்கும் இடங்கள் போன்றவற்றை வளர்ச்சி மற்றும் விரிவாக்கம் என்ற பெயரில் அரசு மற்றும் கார்ப்பரேட்டுகள் அபகரிக்க அனுமதிக்க மாட்டோம்.

● ஆறு, குளம், அணைகள் போன்றவற்றில் மீன்பிடிக்கும் அனுமதியில், மீனவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இதற்காக, மீனவ கிராமங்களில், மீன்பிடி கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்படும்.

● கடற்கரையை ஒட்டிய கிராமங்களில், மீன்களைப் பாதுகாப்புடன் வைக்கக் குளிர்பதன நிலையங்கள் உருவாக்கப்பட்டு, மீனவர்களிடமே ஒப்படைக்கப்படும்.

● மீன் வளக் கல்லூரிகள், கடல்சார் பயிற்சி நிலையங்கள், சுற்றுலாத் துறையினரின் படகுத்துறை, கடலோரக் காவல்படை, இந்தியக் கடற்படை போன்ற துறைகளில், தகுதியுள்ள மீனவ இளைஞர்களுக்கு முன்னுரிமையும், இட ஒதுக்கீடும் வழங்கப்படும்.

● ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமல்போகும் மீனவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கவும்,மீன்பிடித் தொழிலுக்காக வெளிநாடு சென்ற இடங்களில் சிறைபிடிக்கப்படும் மீனவர்களை மீட்டுக்கொண்டு வரவும், இந்திய வெளியுறவுத்துறையின் தனி அலுவலகம் ஒன்று சென்னையில் செயல்பட, மத்திய அரசை வலியுறுத்துவோம்.

● மீன்பிடித் தடைக்கால நிவாரண நிதியைப் பத்தாயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

● மீனவர்களுக்குத் தொழில் கடன் வழங்கவும், மீனவ மகளிருக்கு சுய உதவிக் குழுக்கள் அமைத்து, சுயதொழில் கடன் வழங்கவும், "தாட்கோ"போன்று ஒரு சிறப்பு நிதி நிறுவனம் உருவாக்கப்படும்.

● கடலில் காணாமல் போகும் மீனவர்களைத் தேடிக்கண்டுபிடிக்க, எப்போதும் தயார் நிலையில் இரண்டு ஹெலிகாப்டர்கள் திருநெல்வேலி INS கட்டபொம்மன் கடற்படைத்தளத்தில் நிறுத்த நடவடிக்கை எடுக்க வலியுறுத்தப்படும்.

● தமிழ்நாட்டு மீனவர்கள்,தமிழகத்தில் போதிய தொழில் வாய்ப்புகள் இல்லாத காரணத்தால், கேரளா, கர்நாடகா, மகாராஷ்டிரா,குஜராத்,ஒடிசா, ஆந்திரா போன்ற மாநிலங்களில் வேலை செய்கின்றனர். அவர்களுக்குத் தொழில் செய்யும் வாய்ப்புகளை உருவாக்குகின்ற வகையில், தமிழக் கடற்கரை மாவட்டங்களில் சிறு மீன்பிடித் துறைமுகங்கள் உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

# 10 வேளாண்மை

● கொரோனா நோய்த் தொற்றுக்காக அறிவிக்கப்பட்ட பொது முடக்கத்தால் இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) அதலபாதாளத்திற்குச் சென்ற நிலையிலும்,சரிவைச் சந்திக்காத ஒரே தொழிலாக வேளாண்மை இருந்தது. மிக நெருக்கடியான காலகட்டத்திலும் கூட தேசத்தின் பொருளாதாரத்தைச் சரிவிலிருந்து காப்பாற்றிய வேளாண் பெருங்குடி மக்களைப் போற்றிப் புகழ்ந்து, பாராட்டிக் கொண்டாடுவதற்குப் பதிலாக, விவசாயிகளையும் - விவசாயத்தையும் வஞ்சித்து அவர்களின் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கும் மூன்று விவசாய விரோதச் சட்டங்களை நிறைவேற்றியிருக்கிறது மத்திய அரசு. பஞ்சாப், ராஜஸ்தான், சத்தீஷ்கர் போன்ற காங்கிரஸ் கட்சி ஆளும் மாநிலங்களைப் போல, தமிழகத்திலும், மத்திய வேளாண் விரோதச் சட்டங்களுக்குப் பதிலாக, விவசாயிகளின் நலனைப் பாதுகாக்கின்ற வகையில் மாற்றுச் சட்டங்கள் கொண்டுவரப்படும்.

● பருவமழை பொய்த்தல், இயற்கைச் சீற்றம், வனவிலங்குகளின் அச்சுறுத்தல், பூச்சிகள் மற்றும் நோய்த் தாக்குதல், இடுபொருட்களின் விலையேற்றம் மற்றும் பற்றாக்குறை, வேலையாள் பற்றாக்குறை, விளைபொருட்களுக்குத் தகுந்த விலையின்மை, கடன் தொல்லை, மத்திய - மாநில அரசுகளின் உதாசீனம் போன்ற பலமுனைத் தாக்குதலால் நிலைகுலைந்து நிற்கும் தமிழக விவசாயிகளையும், விவசாயத்தையும் தூக்கி நிறுத்தும் பெரும் பொறுப்பினை காங்கிரஸ் முன்னின்று செய்யும்.

● இதன் முதல் படியாக, ஆண்டுதோறும் சட்டப்பேரவையில் வேளாண்மைக்கென்று தனி நிதிநிலை அறிக்கை (Budget for Agriculture) தாக்கல் செய்யப்படும்.

● அதிமுக அரசு அறிவித்துள்ள ‘கூட்டுறவு வங்கிகளில் வேளாண் கடன் தள்ளுபடி’ தேர்தல் நோக்கில் தரப்பட்டுள்ள வெற்று அறிவிப்பே! பெரும்பாலான விவசாயிகளுக்கு இந்த அறிவிப்பால் எந்த நன்மையும் இல்லை. புதிய அரசு பொறுப்பேற்றதும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், மற்றும் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் வாங்கியுள்ள பயிர்க் கடன்கள் முழுமையாக் கணக்கெடுக்கப்பட்டு, கடன் சுமைகளிலிருந்து தமிழக விவசாயிகளை மீட்டெடுக்கத் தேவையான திட்டங்கள் அறிவிக்கப்படும்.

● வேளாண் பெருங்குடி மக்களுக்கு இருக்கும் மிகப்பெரிய சவால் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு, அவர்களால் விலை நிர்ணயம் செய்ய முடியவில்லை என்பதுதான். இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண விரும்பிய அன்றைய மத்திய காங்கிரஸ் அரசு, வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் தலைமையில் குழுஅமைத்து, வேளாண் விளைபொருட்களுக்கு, உரிய விலை நிர்ணயம் செய்ய வழிமுறைகளை உருவாக்கித் தருமாறு கேட்டது. நெல்,கரும்பு உள்ளிட்ட வேளாண் விளைபொருட்களுக்கு உற்பத்தி செலவைவிட 50% அதிகம் விலை நிர்ணயிக்கப்படவேண்டும் என்று பரிந்துரை செய்தது. இப்பரிந்துரையைச் செயல்படுத்துவதற்குப் பதிலாக,வேளாண் விளைபொருட்களின் கொள்முதலை,பெருமுதலாளிகளுக்குத் திறந்துவிட, மத்திய அரசு சட்டமியற்றி, அதனை மாநில அதிமுக அரசும் ஆதரித்து, தமிழ்நாட்டில் செயல்படுத்தக் காத்திருக்கின்றது. புதிய அரசு பொறுப்பேற்றவுடன் எம்.எஸ்.சுவாமிநாதன் கமிட்டியின் பரிந்துரைகளை அமல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

● நெல் கொள்முதல் நிலையங்களில் ஒரு கிலோ குண்டுரக நெல்லுக்கு தற்போது ரூ.12.80 வழங்கப்படுவதை, ரூ.15 ஆக உயர்த்தவும், ஒரு கிலோ சன்னரக நெல்லுக்கு தற்போது வழங்கப்படும் ரூ.14.20 ஐ ரூ.16.50 ஆக அதிகரித்து வழங்கவும், கரும்புக்கு டன்னுக்கு ரூ.3,500 வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

● இதைப் போலவே, விவசாயிகள் உற்பத்தி செய்யும் காய் - கனிகள், நிலக்கடலை, தானிய வகைகள், மஞ்சள் போன்ற மற்ற விளைபொருட்களுக்கும் குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

● தென்னை விவசாயத்தை அதிகம் கொண்ட குமரி, கோவை, திருப்பூர், தேனி, தென்காசி மற்றும் டெல்டா மாவட்டங்களில், தேங்காய் நார், தென்னங்கீற்று மற்றும் தேங்காய் எண்ணை சம்பந்தப்பட்ட தொழில்கள் வளர்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

● தேயிலை, காபி, ரப்பர், ஏலக்காய் ,கிராம்பு போன்ற மலைப் பகுதிகளில் விளையும், பொருட்களின் உற்பத்தியைப் பெருக்கவும், அவற்றுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்கவும் தகுந்த திட்டங்கள் உருவாக்கப்படும்.

● முடக்கப்பட்ட ‘உழவர் சந்தைகள்’ மீண்டும் செயல்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டும்,தேவைப்படுகின்ற இடங்களில் புதிய உழவர் சந்தைகள் தொடங்கப்பட்டும், விவசாயிகளே தங்கள் விளைபொருட்களை இடைத்தரகர்கள் இன்றி, உபயோகிப்பாளர்களுக்கு நேரடியாக விற்பனை செய்யும், முயற்சிகள் ஊக்குவிக்கப்படும்.

● புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தவும், புதியவகை இயந்திரங்களைச் சிறு, குறு விவசாயிகளின் பயன்பாட்டுக்குத் தரவும்,தோட்டக் கலை மற்றும் புதிய வகைப்பயிர்களை அறிமுகம் செய்யவும்,வேளாண் பட்டதாரிகள் மற்றும் பட்டப்படிப்பை

முடித்தவர்களை வைத்து வேளாண் சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்படும். இக்கூட்டுறவுச் சங்கங்களில், அப்பகுதி விவசாயிகள் உறுப்பினர்களாக்கப்படுவார்கள். வேளாண் இயந்திரங்கள் வாங்கவும், தரமான இடுபொருட்களைக் கொள்முதல் செய்து, விவசாயிகளுக்கு விநியோகம் செய்யவும் தேவைப்படுகின்ற மூலதனத்தை, இக்கூட்டுறவுச் சங்கங்களுக்கு மத்திய கூட்டுறவு வங்கிகள் குறைந்த வட்டியில் கடனாக வழங்கும்.

● ஒவ்வொரு மாவட்டத்திலும்,அந்த மாவட்டத்தின் சூழ்நிலை, நில அமைப்பு, தட்பவெட்பநிலை, பாசன நீர்வசதி, போன்றவற்றின் அடிப்படையில் பயிரிடப்படும் பயிர்களும், விவசாயிகளின் பிரச்சினைகளும் மாறுபடுகின்றன. இவற்றை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, உரிய நிவாரணம் பெற, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ‘மாவட்ட வேளாண்மை வளர்ச்சிக்குழு’ ஏற்படுத்தப்படும். இக்குழுவில், விவசாயிகளின் பிரதிநிதிகள், வேளாண்மைத்துறை அலுவலர்கள், பொதுப்பணித்துறை அதிகாரிகள் மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள் இடம் பெறுவர். இரண்டு மாதத்திற்கு ஒருமுறை இக்கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவரால் கூட்டப்பட்டு, மாவட்ட விவசாயிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும். முதலமைச்சர் தலைமையில் இதைப் போன்ற ஒரு குழு மாநில அளவில் அமைக்கப்பட்டு, மூன்று மாதத்திற்கு ஒருமுறை கூடி மாநிலம் தழுவிய விவசாயிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும்.

● விவசாயிகளுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படும். மின்இணைப்பு கேட்டு காத்திருக்கின்ற விவசாயிகளுக்கு விரைவில் மின்இணைப்பு வழங்கப்படும். விவசாயிகள் தங்களுக்குத் தேவைப்படுகின்ற மின்சாரத்தை சூரிய ஒளிமூலம் பெறுவதற்கான ஏற்பாட்டைச் செய்வதற்கு மானியத்துடன் கடன் வழங்கப்படும்.

● காய்கறிகள், பழங்கள் உற்பத்தி செய்யும் விவசாயிகள், அவர்கள் விரும்பும்போது அவர்களது உற்பத்தியை விற்க வசதியாக, அவற்றைப் பதப்படுத்தி வைக்க தமிழ்நாடு வேர்ஹவுசிங் கார்ப்பரேஷன் மூலம் குளிர்பதனக் கிடங்குகள் கட்டப்பட்டுக் குறைந்த கட்டணத்தில் விவசாயிகளுக்கு வாடகைக்கு விடப்படும்.

● தமிழ்நாடு நீர்ப்பற்றாக்குறை மாநிலமாக இருப்பதால், குறைவான நீர்ப்பாசனத்தில் நிறைவாக விவசாயம் செய்ய, இஸ்ரேல் நாட்டுத் தொழில்நுட்பங்களைப் பின்பற்ற, விவசாயிகளுக்குச் சிறப்புப் பயிற்சி வழங்கப்படும். சொட்டுநீர்ப் பாசனத்திற்கு, மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்படும்.

● குடிமராமத்துப் பணிகளுக்காக, பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் அளவுக்கு நிதி ஒதுக்குவதே ஊழல் செய்வதற்குத்தான் என்ற சூழ்நிலை தற்போது தமிழகத்தில் இருப்பதை யாரும் மறுக்க முடியாது. மத்திய அரசு வழங்கும் சிறப்பு நிதியும், வெளிநாட்டு நிறுவனங்களிலிருந்து வாங்குகிற பெரும் கடன் தொகையும் போதாது என்று, மாநில அரசும் நூற்றுக்கணக்கான கோடி ரூபாயை ஒதுக்கி, விவசாயிகளுக்கே தெரியாமல் டெண்டர் விட்டு,அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் அடிக்கும் கூட்டுக் கொள்ளைக்கு அளவே இல்லை. ஒதுக்கப்பட்ட நிதி முழுமையும் முறையாகச் செலவிடப்பட்டிருந்தால் மழைக்காலத்தில் அதிக நீரை சேமித்திருக்கமுடியும். ஆனால், இந்த ஆண்டு பருவமழையின் போது, இயற்கை அள்ளித் தந்த நூற்றுக்கணக்கான டி.எம்.சி. தண்ணீர் கடலில் வீணானதை அனைவரும் அறிவர். குடிமராமத்துக்கான நிதி ஒதுக்கீடு, அதற்கென உருவாக்கப்படும் சம்பந்தப்பட்ட பாசன விவசாயிகள் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரின் நேரடி மேற்பார்வையில் பணி நடைபெறும். குடிமராமத்துப் பணிகள் முறையாக நடக்கிறதா? என்பதைக் கண்காணிக்க,விவசாயிகளின் பிரதிநிதிகளும், சமூக ஆர்வலர்களும் அடங்கிய ஒரு கண்காணிப்புக் குழு உருவாக்கப்படும்.

## இயற்கை வேளாண்மை

● *தேவைக்கு அதிகமான இரசாயன உரங்கள், அதிக நச்சுள்ள பூச்சிக் கொல்லி மருந்துகள், மரபணு மாற்றப்பட்ட விதைகள், தவறான வேளாண் பணி முறைகள் ஆகியவற்றின் காரணமாக, மக்கள் மத்தியில் புதிது புதிதாக வாழ்வியல் நோய்கள் உருவாகிப் பரவுவதாக விஞ்ஞான ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. இதனை எதிர்கொள்கின்ற வகையில் மக்கள் இரசாயனக் கலப்பில்லாத, நச்சு பூச்சி மருந்துகள் பயன்படுத்தப்படாத இயற்கை உரங்களும், - இயற்கையான கிருமி நாசினி மட்டுமே பயன்படுத்தப்பட்ட விளைபொருட்களை உண்ணவேண்டும் என்று உணவியல் நிபுணர்கள் அறிவுறுத்துவதைக் கணக்கில் கொண்டு, இயற்கை வேளாண் விளை பொருட்களின் தேவை அதிகரித்துள்ளது. இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்கவும், நமது பாரம்பரிய விதை இனங்கள் அழிந்துவிடாமல் பாதுகாக்கவும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.*

## நெல் கொள்முதல்

● *டெல்டா மாவட்டங்கள் உள்பட நெல்விளைவிக்கும் பல மாவட்டங்களில், விளைச்சலுக்கு ஏற்ப கொள்முதல் நிலையங்கள் செயல்படாததால் விவசாயிகள் பெரும் இழப்பைச் சந்திக்கிறார்கள். அதிலும், மழைக்காலங்களில் கொள்முதல் நிலையங்களில் கொண்டு சேர்க்கப்பட்டும், ஆள் பற்றாக்குறையின் காரணமாக, கொள்முதல் செய்யப்படாமல், அந்த நிலையங்களில் குவித்து வைக்கப்பட்டுள்ள நெல், மழையில் நனைந்து, ஈரத்தில் முளைத்து பல்லாயிரக்கணக்கான நெல் மூட்டைகள் தொடர்ந்து வீணாவது வாடிக்கையாகிவிட்டது. இந்நிலையைச் சரிசெய்ய, ஏற்கெனவே இருக்கும் கொள்முதல் நிலையங்களோடு கூடுதலாக தேவைக்கேற்ப புதிய கொள்முதல் நிலையங்கள் துவங்கப்படும்.*

## மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் இடையே ஏற்படும் மோதல்கள்:

● *மலையடிவாரக் கிராமங்களின் வளர்ச்சி, மக்கள் தொகைப் பெருக்கம், காடுகள் அழிப்பு, காடுகளின் நடுவே உருவாக்கப்படும் சுற்றுலா விடுதிகள், தொழிற்சாலைகள் போன்ற காரணங்களால், யானை போன்ற வனவிலங்குகளின் வாழ்விடங்களும், உணவு ஆதாரங்களும் வெகுவாகக் குறைந்துவிட்டதால், வனவிலங்குகள் குடியிருப்புப் பகுதிகளுக்கும், விவசாய விளைநிலங்களுக்கும் வந்து பெரும் ஆட்சேதங்களையும், பொருட்சேதங்களையும் அவை ஏற்படுத்துகின்றன. வனவிலங்குகளின் வாழ்விடங்களையும், அவற்றின் தீவன ஆதாரங்களையும் பாதுகாக்கவும், அவற்றால் ஏற்படுகின்ற அழிவுகளையும், மனிதர்களால் விலங்குகளுக்கு ஏற்படும் துன்புறுத்தலையும் தடுத்திடவும், தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். வனவிலங்குகளால் ஏற்படும் உயிரிழப்புகளுக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை ரூ.10 லட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.*

## உபதொழில்கள்

● *விவசாயத்தின் உபதொழில்களான கறவை மாடு வளர்த்தல், ஆடு வளர்ப்பு, மூலிகைத் தோட்டம், மலர்த்தோட்டம் அமைத்தல், மீன் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு,பட்டுப் புழு வளர்ப்பு, கறிக் கோழி வளர்ப்பு, கூடைப் பாய் முடைதல், மண்பாண்டம் செய்தல் போன்ற கிராமத் தொழில்களை ஊக்குவித்து வளர்க்கும் வகையில் 25% மானியத்துடன் கடன் வசதி செய்து தரப்படும்.*

## பனைத்தொழில்

● *தமிழ்நாட்டின் பெருமைக்குரிய கலாச்சார அடையாளங்களில் ஒன்றாக விளங்கும் பனைமரங்களை, ஆறு மற்றும் ஏரிகளின் கரைகளில் வளர்க்க முயற்சிகள் எடுப்பதோடு,*

பனைப்பொருட்கள் தொழிலின் வளர்ச்சிக்கும் அரசு ஆவன செய்யும். பனைமரம் ஏறுவதற்கும், பனை வெல்லம் காய்ச்சுவதற்கும், பனங்கிழங்கு, நொங்கு போன்ற பனை விளைச்சல் பொருட்களைப் பதப்படுத்தி சந்தைப்படுத்துவதற்கு புதிய தொழில்நுட்ப வசதிகளை உருவாக்கி, தேவையான கடன் மானியத்துடன் பனைத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும்.

● விவசாயிகளுக்கும், மண்பாண்டங்கள் மற்றும் செங்கல் தயாரிக்கத் தேவைப்படும் ஆறு,குளங்களில் படிந்திருக்கின்ற வண்டல் மண் தற்போது அரசியல் – அதிகார வர்க்கத்தால், ஏகபோகம் கொண்டாடப்பட்டு, பல இடங்களில் திருட்டுத்தனமாக வெளிமாநிலங்களுக்குக் கடத்தப்படுகின்றன. இந்த இயற்கைக் கொள்ளையைத் தடுத்து நிறுத்தி, அந்த இயற்கைவளம், பொதுநலனுக்கும், விவசாயிகளுக்கும் முறையாகப் பயன்படுகிற விதத்தில் விதிகள் திருத்தப்பட்டு புதிய விதிகள் உருவாக்கப்படும்.

# 11 நீர் மேலாண்மை

● அண்டை மாநிலங்களிலிருந்து கிடைக்கின்ற நீர் ஆதாரங்களை, சேதமின்றி முறையாகச் சேமித்துவைக்கவும், தமிழகத்தின் நீர் வழிகள், நீர்நிலைகள், ஏரிகள், கண்மாய்கள், குளங்கள் ஆகியவற்றில் இருக்கின்ற ஆக்கிரமிப்புகளை அகற்றிச் சீரமைக்கவும், பாசனநீர் திறப்பதை முறைப்படுத்தவும், வெள்ள காலங்களில் ஆறு, குளங்களுக்கு வருகின்ற வெள்ளப் பெருக்கைக் கண்காணிக்கவும் தனியாக ஒரு 'நீர்மேலாண்மைக் குழு / வாரியம்' ஏற்படுத்தப்படும். நீர்மேலாண்மைக்காக, ஐந்து ஆண்டுகள் செயல்படுத்தக்கூடிய சிறப்புத்திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு, ஆண்டுக்கு ரூ.5,000 கோடி ஒதுக்கப்பட்டு, ஐந்து ஆண்டுகளில் ரூ.25,000 கோடிக்கான பெரும் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும்.

● சென்னை நகரில் கொஞ்சம் மழை பெய்தாலே சாலைகளெல்லாம் வெள்ளக்காடாகிவிடும் நிலைமை மாற, மாநகர் விரிவாக்கம் செய்யப்பட்டதைக் கருத்தில் கொண்டு, ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் திட்டத்தைச் செயல்படுத்தவும், மழைநீர் வடிகால்களை முறையாகப் பராமரிக்கவும், ஒரு நிரந்தரமான திட்ட செயலாக்கத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

● சென்னையின் கூவம்,அடையாறு, பக்கிங்காம் கால்வாய் வழியாகச் செல்லும் ஆறுகளைச் சுத்தப்படுத்தி, சீரமைத்து, கடந்த காலங்களில் பயன்படுத்தப்பட்டது போல, நீர்வழிப் போக்குவரத்திற்கு உபயோகப்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

● சென்னை மாநகராட்சியில் மட்டும் கடந்த இரண்டு ஆண்டுகளில் மூவாயிரம் கோடி ரூபாய் செலவிடப்பட்டும், மழைநீர் வடியவில்லை என்பது வேதனை தரும் செய்தி. இதில் நடந்துள்ள முறைகேடுகளை விசாரிக்க தனி விசாரணைக்குழு நியமிக்கப்பட வேண்டும்.

● மேட்டுர் அணை திறக்கப்படும் போதெல்லாம் காவிரி டெல்டாவின் கடைமடைப் பகுதிகளுக்கு நீர் சென்று சேர்வதில்லை என்ற குற்றச்சாட்டு விவசாயிகள் மத்தியில் உள்ளது. அதனைச் சரிசெய்யும் விதத்தில், மேட்டூர் அணையிலிருந்து செல்லும் கிளைக் கால்வாய்கள் தூர்வாரப்பட்டு, கடைமடைப்பகுதிக்கும் விவசாயத்திற்கும் நீர் சென்றடைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### நிலத்தடிநீர் பாதுகாப்பு

● மிக அதிகமான பயன்பாட்டின் காரணமாகவும், அடிக்கடி ஏற்படும் வறட்சியின் காரணமாகவும், தமிழ்நாட்டில், நிலத்தடி நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து, ஆபத்தான

கட்டத்தை எட்டியுள்ளது. கடற்கரை மாவட்டங்களில்,பல குடி தண்ணீர் கிணறுகள் குடிநீருக்கு உதவாத உப்பு நீராக மாறிவிட்டது. இதற்காக உருவாக்கப்பட்ட தமிழக நிலத்தடிநீர் பாதுகாப்புச் சட்டம், முறையாக அமல்படுத்தப்பட்டு, அதன் மூலம் நிலத்தடிநீர் பாதுகாக்கப்படும்.

### காவிரி நதிநீர் ஆணையம்

● காவிரி நதிநீர்ப் பங்கீட்டுக்காக, உச்ச நீதிமன்றம் தீர்ப்பில் தந்த காவிரி நீர் மேலாண்மை வாரியத்தையும், ஒழுங்காற்றுக் குழுவையும், தீர்ப்பின் நோக்கத்தின்படி ஒரு தன்னாட்சி பெற்ற அமைப்பாகச் செயல்பட அனுமதிக்காமல், மத்திய நீர்வளத்துறை அமைச்சகத்தின் ஒரு துறையாக மாற்றியிருப்பது ஏற்புடையதல்ல. அதனைத் தன்னாட்சி பெற்ற சுதந்திரமான அமைப்பாகச் செயல்பட, தேவையான நடவடிக்கைளை காங்கிரஸ் மேற்கொள்ளும்.

# 12 கல்வி - மாணவர் நலன்

● பள்ளிக்கல்வி மீண்டும் மாநிலத்தின் அதிகாரப்பட்டியலுக்குக் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

● மத்திய அரசின் தேசிய கல்விக் கொள்கை 2020 ஐ தமிழ்நாடு ஏற்றுக்கொள்ளாது என்று அறிவிக்கப்படும்.

● நீட் தேர்வு சாமானிய தமிழக மாணவர்களின் எதிர்காலத்தை மிகவும் பாதிப்பதால், அதனை ரத்து செய்வதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். அது ரத்து செய்யப்படும் வரை, கிராமப்புற மற்றும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு நீட் தேர்வில் வெற்றி பெறுவதற்கான சிறப்புப் பயிற்சி மையங்கள் அனைத்து ஊராட்சி ஒன்றிய அளவிலும் தொடங்க ஏற்பாடு செய்யப்படும்.

● மருத்துவக் கல்வி உட்பட அனைத்துத் தொழில் கல்லூரிகளிலும் (professional colleges) அரசுப்பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 7.5% ஒதுக்கீட்டை 10 சதவிகிதமாக உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

● கொரோனா காலத்தில் அறிவிக்கப்பட்ட தொழில் முடக்கத்தின் காரணமாக, தனியார்ப் பள்ளிக் கட்டணங்களைப் பெற்றோர்கள் கட்ட முடியாததால், அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை அதிகமாகியுள்ளது. அரசுப் பள்ளிகளின் கட்டமைப்பு வசதிகளைக் கூட்டவும், கல்வித்தரத்தை மேம்படுத்தவும் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

● 31-12-2020 வரை உள்ள கல்விக் கடன்கள் அனைத்தும் ரத்து செய்யப்படும்.

● தமிழகத்தில் உள்ள மத்தியப் பல்கலைக்கழகங்கள் உட்பட அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் 75% கல்வி இடங்கள் தமிழ்நாட்டு மாணவர்களுக்காக மட்டும் ஒதுக்கப்படும்.

● முதல் தலைமுறை மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை கலை - அறிவியல் (Arts - Science Colleges) கல்லூரி மாணவர்களுக்கும் வழங்கப்படும். அனைத்து அரசுக் கல்லூரிகளிலும் வேலைவாய்ப்புகளைப் பெற்றுத் தருவதற்கான சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்களுக்கு ஏற்பாடு செய்யப்படும்.

● அரசுக் கல்லூரிகள் மற்றும் தனியார் கல்லூரிகளில் பயிலும் பட்டியலின, மலைவாழ், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மை சமூகங்களைச் சார்ந்த எளிய மாணவர்களுக்குத் தங்கிப் படிக்க தாலுக்காஅளவில் 'கல்லூரி மாணவ - மாணவியர் விடுதிகள்' உருவாக்கப்படும்.

● தமிழகத்தில் இருக்கும் கேந்திரிய வித்தியாலயாக்கள் உட்பட அனைத்து மத்திய அரசின் பள்ளிகளிலும் தமிழ் கட்டாயப்பாடமாகச் சொல்லித் தரப்படவேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்துவோம்.

# 13 மாற்றுத் திறனாளிகள் நலன்

● எவ்வித தொழிலும் செய்யமுடியாத மாற்றுத்திறனாளிகள் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கென்று ஒரு சிறப்புச் சமூகப் பாதுகாப்புத் திட்டம் உருவாக்கப்படும். அதன் மூலமாக அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.2,500/- உதவித்தொகை வழங்க திட்டங்கள் தீட்டப்படும்.

● ஆதரவற்ற மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியவர்களுக்கு மாவட்டந்தோறும் சிறப்பு வசதிகளுடன் 'பராமரிப்பு இல்லங்கள்' உருவாக்கப்படும்.

● நலிந்த பிரிவினருக்காக அரசின் வீடு கட்டும் திட்டங்களில், 2% வீடுகள் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும்.

● சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்குச் சிறப்புக் கல்வி உதவித்தொகையும்,பார்வையற்ற மாணவ - மாணவியருக்கு பிரெயில் பாடப் புத்தகங்கள்,சிறப்பு மடிக் கணினிகள் வழங்கப்படும்.

● தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணையம் மூலம் GROUP - 1 & GROUP - 4 பணிகளுக்குத் தேர்வாகி இதுவரை பணியமர்த்தப்படாத மாற்றுத்திறனாளிகளுக்கு உடனடியாக பணிநியமன ஆணைகள் வழங்கப்படும்.

● மாற்றுத்திறனாளிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை நிரப்பப்படாத அரசுப் பணியிடங்கள் கணக்கெடுக்கப்பட்டு, அரசுத் தேர்வாணையம் மூலம் சிறப்புத்தேர்வுகள் நடத்தப்பட்டு பணி நியமனங்கள் செய்யப்படும்.

● உள்ளாட்சி அமைப்புகளில், கிராமப் பஞ்சாயத்திலிருந்து மாநகராட்சி வரையிலான அனைத்து அமைப்புகளிலும், மாற்றுத்திறனாளி ஒருவர் அவர்களுடைய பிரதிநிதியாக நியமன உறுப்பினராக நியமிக்கப்படும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

# 14 கலை மற்றும் பண்பாடு

**மீண்டும் கடற்கரைச் சாலையில் சிவாஜி கணேசன் சிலை:**

● தமிழ்த் திரையுலகில் 300 க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்து, திரைப்படங்கள் மூலம் இளைஞர்களிடையே தேசிய உணர்வை வளர்த்தவரும், விளம்பரமில்லாமல் மக்கள்

சேவை செய்தவரும், தமிழக காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சிக்காக 30 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றியவருமான, தமிழ்க் கலையின் அடையாளமாகத் திகழ்ந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு, திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியில், முதல்வர் கலைஞர் அவர்களால், சென்னை கடற்கரைச் சாலையில் அமைக்கப்பட்டிருந்த சிலை ஏதோ காரணங்களைக் காட்டி அகற்றப்பட்டது. காழ்ப்புணர்ச்சியின் காரணமாக அகற்றப்பட்ட நடிகர் திலகம் சிவாஜி கணேசன் சிலை, மீண்டும் சென்னை கடற்கரையின் மகாத்மா காந்தி சிலைக்கும் பெருந்தலைவர் காமராஜர் சிலைக்கும் இடையில் நிறுவப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

- நடிகர்திலகம் சிவாஜி கணேசன் பிறந்தநாளான அக்டோபர் 1ஆம் நாள், கலை எழுச்சி நாளாக தமிழக அரசின் சார்பில் கொண்டாட ஆவன செய்யப்படும்.

### திரைப்படத்துறை நலன்

- திரைத்துறையில் பணியாற்றும் லட்சக்கணக்கான கடைநிலை ஊழியர்களின் பணிப் பாதுகாப்பு மற்றும் விபத்தினால் அவர்கள் பாதிக்கப்படும்போது, அவர்களின் குடும்பத்திற்குப் பொருளாதாரப் பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- திரையரங்குகளில் முறைப்படுத்தப்படாமல் வேறுபட்ட கட்டணங்கள் வசூலிக்கப்படுவதால், தியேட்டருக்குச் சென்று திரைப்படம் பார்ப்பவர்களின் எண்ணிக்கை குறைந்து, அதனால், திருட்டுத்தனமாகத் திரைப்படங்கள் வெளியிடுவது அதிகரித்துள்ளது. திரையரங்கு உரிமையாளர்கள் மற்றும் வினியோகஸ்தர்கள் ஆகியோருடன் கலந்துபேசி. திரையரங்குகளில் முறையான, நியாயமான கட்டணம் வசூலிக்க ஏற்பாடு செய்யப்படும்.

- சென்னையில் படப்பிடிப்புகளுக்கென்று பெரிய அளவிலான அரங்குகளைக் கொண்ட ஒரு திரைப்பட நகரம் அமைக்க முயற்சி மேற்கொள்ளப்படும்.

- கிராமிய மற்றும் நாட்டுப்புறக் கலைஞர்கள் மறுவாழ்விற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். கொரோனாகாலத்தில் நலவாரியத்தில் பதிவு செய்யாத பல்லாயிரம் குடும்பங்கள் மிகவும் துன்பப்பட்டனர். தமிழகம் முழுவதும் உள்ள நாட்டுப்புற மற்றும் கிராமியக் கலைஞர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு அடையாள அட்டை வழங்குவதோடு, அவர்களுக்கான ஓய்வூதியத்தையும் உயர்த்தி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

# 15 தொழிலாளர், ஆட்டோ தொழிலாளர் நலன்

- தமிழ்நாடு கட்டுமானம், அமைப்புசாரா ஆட்டோ ஓட்டுநர் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்கள் உள்பட மொத்தம் 17 நல வாரியங்கள் நடைமுறையில் செயல்பட்டு வருகின்றன.

- நலவாரியங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து தற்போது வரை பெரும் மாற்றம் இல்லாமல் கிடைக்கும் சிறு, சிறு உதவிகளால், எந்த தொழிலாளர்களுக்கும் பயன் அளிப்பதாக இல்லை.

● தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் செஸ் வரி வசூலிக்கப்பட்டு, சுமார் 3,000 கோடிக்கு மேல் (ரூ. 3,726 கோடி) இருந்தும் அவர்களுக்குக் கிடைக்கும் உதவிப் பொருள் எந்தப் பயனையும் ஏற்படுத்துவதாக இல்லை. கட்டுமானம் மற்றும் ஆட்டோ ஓட்டுநர்கள் நலவாரியம் தவிர, மற்ற 15 வாரியத் தொழிலாளர்களுக்கும் உதவிகள் கிடைப்பது பெரும் காலதாமதம் ஆகிறது. இதற்குக் காரணம் பணம் இல்லாததே. அரசு ஒதுக்கீடு செய்யவேண்டிய நிலை உள்ளது. அதனால் கட்டுமானம் மற்றும் ஆட்டோ ஓட்டுநர் வாரியங்களுக்கு வசூல் செய்யப்படும் செஸ் வரிபோல் மற்ற நலவாரியங்களுக்கும் செஸ் வரி வசூல் செய்யத் தேவையான நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்படும்.

● வாரியங்கள் அனைத்தும் ஒருங்கிணைந்து தொழிலாளர் நல அமைச்சகத்தின் கீழ் தனிச் செயலாளரை நியமித்து, தற்போது இருக்கின்ற நல வாரியங்களில் உள்ள குறை, நிறைகளை அரசு பொறுப்பேற்றவுடன் விரைவில் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும்.

● வாரியத்தில் கணினிமயமாக்குவதை எளிய முறையில் செயல்படுத்துவதற்கு ஓர் உயர்மட்ட ஆலோசனைக்குழு நியமிக்கப்பட்டு, தங்குதடையின்றி செயல்பட வழிவகுக்கப்படும்.

● வாரிய உறுப்பினர்களுக்கு அவர்களுடைய தொழில்களுக்கான சான்றிதழ்கள் கட்டாயம் பெறுவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுத்து, சான்றிதழ் பெற்ற தொழிலாளர்களுக்கு அரசாங்க வேலைகளில் முன்னுரிமை அளித்து அவர்களை ஊக்கப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

● வாரியத்தில் தொழிற்சங்கங்களுக்கு உரிய முன்னுரிமை அளிக்கப்படும். ஒவ்வொரு மாவட்டத்திலும்,தொழிலாளர் நலவாரியங்களைச் சிறப்பாகச் செயல்படுத்த முத்தரப்புக் கமிட்டிகளை வருடத்திற்கு 6 முறை கூட்டி நலவாரியங்களில் இருக்கின்ற பிரச்சனைகளுக்குக் குறித்த நேரத்தில் தீர்வு காண வழிவகை செய்யப்படும்.

● வாரியத்தில் உள்ள செஸ் வரி மூலம் வசூலிக்கப்பட்ட பணத்தை வேறு எந்த ஓர் அரசாங்க வேலைகளுக்கும் பயன்படுத்தாமல் காலச் சூழ்நிலைக்கேற்ப, வாரியங்கள் மூலம் வழங்கப்படும் உதவித் தொகையை மாற்றியமைத்து தொழிலாளர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## புலம்பெயர்ந்த தொழிலாளர்கள்

● புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கு அவர்களுடைய பிரச்சனைகள் மற்றும் நலன்களைக் காக்க,அவர்களுக்கென தனித்துறையை உருவாக்கவேண்டும்.

● இங்கிருந்து செல்லும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு,குறிப்பாக வெளிநாடு செல்பவர்களுடைய பதிவைக் கட்டாயமாக்குவதற்கான நெறிமுறைகளை அரசாங்கம் தீவிரமாகச் செயல்படுத்தவேண்டும் .

● வெளிநாடுகளுக்குச் சென்று வேலை செய்யும் தொழிலாளர்கள் அவர்களுடைய தொழில் சான்றிதழ்களைப் பெற்றே வெளிநாடு செல்வதற்கும், அவர்களின் தொழில்களை மேம்படுத்துவதற்கும் தகுந்த பயிற்சி பெறுவதற்கும் புலம்பெயர்ந்த தொழிலாளர் துறையின் மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

● தமிழக அரசால் செயல்பாட்டில் உள்ள தொழிலாளர் நலவாரியத்தைப் போல் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கும் ஓர் நலவாரியம் அமைத்து அவர்கள் உதவிபெற அரசாங்கம் ஏற்பாடுகள் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

## ஆட்டோ தொழிலாளர் நலன்

● ஆட்டோ ஓட்டுநர்களுக்கும் மற்ற அமைப்புசாரா தொழிலாளர்களைப் போல் இல்லாமல், தனியாக CESH வரி வசூலிக்கப்பட்ட நிதி ஏறக்குறைய 400 கோடி ரூபாய் அளவுக்கு உள்ளது. தமிழகத்தில் 3 லட்சத்திற்கும் மேற்பட்ட ஆட்டோ ஓட்டுநர்கள்

இருந்தாலும், அதில், 40,000 ஆட்டோ ஓட்டுநர்கள் மட்டுமே ஆட்டோ ஓட்டுநர் வாரியத்தில் பதிவு செய்துள்ளனர்.

● ஆட்டோ வாரியத்தில் பதிவு செய்ய அவர்களின் வருவாயையும், நேரத்தையும் இழக்கவேண்டியுள்ளது. இதனை மாற்றும் வகையில் லைசென்ஸ் உள்ள அனைத்து ஆட்டோ ஓட்டுநர்களுக்கும் ஆட்டோ வாரியத்தில் பதிவு செய்யும் முறை எளிமைப்படுத்தப்பட்டு, வாரியத்தில் பதிவு செய்யும் ஒவ்வொரு ஆட்டோ ஓட்டுநரின் வங்கிக் கணக்கிலும் ரூ. 400/- (ஒருமுறை) ஊக்கத்தொகையாகச் செலுத்தப்படும்.

● ஆட்டோ தொழிலாளர்களுக்குப் பாண்டிச்சேரியில் போனஸ் வழங்குவதுபோலவே, தமிழகத்திலும் வழங்கப்படவேண்டும்.

● அடித்தட்டு மக்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் வீடுகள் ஒதுக்கப்படுவது போல், ஆட்டோ ஓட்டுநர்களுக்கும் 5% ஒதுக்கீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

● நிரந்தர வருவாய் இல்லாத ஆட்டோ ஓட்டுநர்களுக்கு நிதி நெருக்கடி என்பது ஒரு நிரந்தரப் பிரச்சினையாகவே உள்ளது. ஆட்டோ ஓட்டுநர்கள் தங்களது வருடாந்திர புதுப்பித்தல் (FC) சமயத்தில் ரூ.10,000/- நிவாரணமாக வழங்கப்பட வேண்டும்.

● OLA – UBER போன்ற அயல்நாட்டின் செயலியைப் போலவே தமிழக அரசு ஒரு செயலியை உருவாக்கி, குறைந்த கட்டணம் வசூலித்து பொது மக்களும் ஆட்டோ ஓட்டுநர்களும் பயன் பெற வழிவகை செய்யப்படும்.

## 16 முதியோர் - ஓய்வூதியதாரர் நலன்

● முதியோர் ஓய்வூதியம் உயர்த்தி வழங்கப்படுவதோடு, அவர்களுக்கான பென்ஷன் தொகை அஞ்சல்துறை மூலம் நேரடியாக வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

● வயது முதிர்ந்தோரைக் கைவிடும் அவர்களுடைய வாரிசுகள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்கும், வாரிசு இல்லாமலும் உணவின்றியும் சிரமப்படும் முதியோருக்குத் தனியாகப் பாதுகாப்பு இல்லங்கள் அமைத்து உணவளிப்பதற்கும் அவர்களைப் பாதுகாப்பதற்கும் உரிய திட்டம் வகுக்கப்படும்.

● அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின், ஓய்வூதியத்துக்கு அரசுக் கருவூலத்திற்குச் சென்று வருடந்தோறும் புதுப்பிக்கவேண்டும் என்பதை மாற்றி, அவர்கள் கணக்கு வைத்திருக்கும் வங்கியிலேயே வாழ்வுச் சான்றிதழ் அளிக்க வழிவகை செய்யப்படும்.

● அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் முதியோர் நலன் மருத்துவ மையம் (GAEDIATRIC CENTRE) உருவாக்கப்படும்.

## 17 இந்து சமய அறநிலையத்துறை மேம்பாடு

● தமிழகம் முழுவதும் உள்ள அனைத்துக் கோவில்களுக்குச் சொந்தமான கட்டிடங்கள், நிலங்கள் கணக்கெடுக்கப்பட்டு, ஆக்கிரமிப்பு செய்திருப்பவர்கள் வெளியேற்றப்படுவதோடு, அவற்றை முறையாகப் பராமரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

● கோவில்களில் சிலைகள் திருட்டு மற்றும் கோவில் சொத்துக்களின் ஆக்கிரமிப்பு போன்றவற்றைத் தடுக்கவும்,தொடர்ச்சியாகக் கண்காணித்து நடவடிக்கை எடுக்கவும்,அதிகாரிகள் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் அடங்கிய மாவட்ட மற்றும் தாலுக்கா அளவிலான குழுக்கள் அமைக்கப்படும்.

● கோவில்களில் தூய்மையைப் பராமரிப்பிற்கும், கோவிலில் பணியாற்றும் ஊழியர்களின் சுகாதார மேம்பாட்டிற்கும் வழிவகை செய்யப்படும்.

● அனைத்துக் கோவில்களிலும் உள்ள தெப்பக்குளங்கள் குறிப்பிட்ட இடைவெளியில் தூர்வாரப்பட்டு, நீர் நிரப்பப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

● தற்போது நடைமுறையில் உள்ள அன்னதானத் திட்டம் மேலும் விரிவாக்கம் செய்யப்பட்டு, அதிக அளவிலான பக்தர்களுக்கு உணவளிக்கும் வகையில் செயல்படுத்தப்படும்.

● வாரத்திற்கு ஒருநாள் ‘ஆலய உழவாரப் பணிநாள்’ என்று அறிவித்து உள்ளூர் மக்கள் மற்றும் பக்தர்களை வைத்து ஆலயங்களைச் சுத்தம் செய்யும் பணியை அரசு ஊக்குவிக்கும்.

● இந்து அறநிலையத்துறைக்குட்பட்ட திருக்கோவில்களில், ஆகம விதிகளுக்குட்பட்டு, அர்ச்சகராகப் பாடசாலைகளில் பயின்று தேர்ச்சி பெற்ற, இந்து மதத்தைச் சேர்ந்த அனைத்து சாதியினரும் அர்ச்சகராகப் பணிபுரியும் விதத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

# 18 பொது விநியோகத் திட்டம் சீரமைக்கப்படும்

● குடும்ப அட்டைகள், வருமானத்தின் அடிப்படையிலும், விருப்பத்தின் அடிப்படையிலும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு, பொருட்கள் வழங்கப்பட்டு வந்த நிலையில், சென்னை உயர்நீதிமன்றம் அரிசி அட்டைதாரர்களுக்கு மட்டுமே பொங்கல் பரிசு வழங்கவேண்டும் என்று உத்தரவிட்டதன் அடிப்படையில், அ.தி.மு.க அரசு எல்லோருக்கும் பொங்கல் பரிசு வழங்க வேண்டும் என்பதற்காக, வாக்கு அரசியலுக்காக, யார் வேண்டுமானாலும் அரிசி அட்டைக்கு மாறலாம் என்று அறிவித்ததால், அரிசி தேவைப்படாதவர்கள்கூட அரிசி அட்டைதாரர்களாக மாறினர். இதனால், அரிசி அட்டைதாரராக மாறியவர்கள், பரிசுப் பணத்தை மட்டும் பெற்றுக்கொண்டு அதன்பிறகு அரிசி வாங்குவதில்லை. இதனால், புதிதாக அரிசி அட்டைதாரர்களாக மாறியவர்களின் அரிசியைப் பெறாத நிலையில், வெளிமார்க்கெட்டில், கள்ளச்சந்தையில் விற்கப்படுகிறது. ரேசன் அரிசி கடத்தலும் தொடர்கிறது. ஒருபக்கம், ஒரு வேளைச் சாப்பாட்டுக்கே துன்பப்படும் ஏழைகள் இருக்க, மறுபக்கம் ரேசன் அரிசி கடத்தப்படுவதும் நடைபெறுகிறது. இத்தகைய முறைகேடுகளைத் தடுக்கும் வகையில், ரேசன் அட்டைகள் முறைப்படுத்தப்படும்.

● ரேசன் கடைகளில் வழங்கப்படும் அரிசியின் தரம் உயர்த்தப்படும். அதேபோல், வழங்கப்படும் பொருட்கள் எடை குறைவாக உள்ளது என்ற குற்றச்சாட்டுக்களைப் போக்கும் விதத்தில் பொருட்கள் அனைத்தும் தரமானதாகவும், சரியான எடையில் பாக்கெட்டுகளில் அடைத்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

● ரேசன் அட்டைதாரர்களிடம் சில பொருட்களை வாங்குமாறு, கட்டாயப்படுத்தும் நடைமுறை ரத்து செய்யப்படும்.

● வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு, இலவச அரிசியுடன், பருப்பு, சமையல் எண்ணெய் உள்ளிட்ட முக்கிய மளிகைச் சாமான்களின் தொகுப்பு மாதந்தோறும் இலவசமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

● ரேசன் கடைகளில் வழங்கப்படும் பொருட்கள் மற்றும் அது சம்பந்தமான குறைகளைக் களைந்திட, அந்தந்த பகுதியில் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் - மக்கள் நலச்சங்க அமைப்புகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுக்கள் அமைக்கப்பட்டுக் கண்காணிக்கப்படும்.

● முதியோர் உதவித்தொகை பெறுபவர் குடும்பத் தலைவர்களாக உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு, ரேசன் பொருட்கள் அனைத்தும் வீடு தேடிவந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

# 19 தமிழகத்தை மின்மிகை மாநிலமாக்குவோம்

● இப்போது தமிழக முதலமைச்சர் முதல் அமைச்சர்கள் வரை கூறிக்கொண்டிருப்பது, தமிழகம் மின்மிகை மாநிலமாகிவிட்டது என்பதுதான்.

● மின்மிகை மாநிலம் என்றால் அரசாங்கமே மின் உற்பத்தியைச் செய்து, தமிழக மக்களின் தேவைபோக மீதியைத் தனியார் நிறுவனங்களுக்கோ அல்லது வெளி மாநிலங்களுக்கோ விற்கவேண்டும். ஆனால், தமிழகத்தில் மின்பற்றாக்குறை இல்லை எனக் காட்டிக்கொள்வதற்காக, வெளியிலிருந்து அதிக விலைக்கு மின்சாரம் வாங்கப்பட்டு மக்களின் வரிப்பணம் வீணடிக்கப்படுகிறது. இதிலும் அதானி உட்பட சில தனியார் நிறுவனங்களிடமிருந்து அதிக விலைக்கு வாங்குவதில் ஆளுங்கட்சியினர் ஆதாயம் பெறுகின்றனர்.

● அதிக விலைக்கு, மின்சாரம் வாங்குவதாலும், புதிய மின்திட்டங்களைக் கொண்டு வராததாலும், ஆண்டுதோறும் 10,000 கோடிக்குமேல் அரசுக்கு நஷ்டம் ஏற்படுகிறது.

● தி.மு.க ஆட்சியில் தொடங்கப்பட்ட உடன்குடி மின் திட்டத்தை பத்து ஆண்டுகள் ஆகியும் இவர்கள் முடிக்கவில்லை.

● தமிழகத்தின் மின் தேவையைக் கணக்கிட்டு, அதற்கேற்ப புதிய மின் திட்டங்கள் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

● காற்றாலை மின் உற்பத்தி மற்றும் சூரியசக்தி மின் உற்பத்தி ஆகியவற்றிற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, தனியார் மூலமாகவும் மின் உற்பத்தியைப் பெருக்க ஊக்கம் அளிக்கப்படும். அப்படி உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை, தமிழக மின்சார வாரியம் மூலம் ஒரு குழு அமைத்து, விலை நிர்ணயம் செய்து, ஊழலுக்கு இடம் தராமல் வாங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

● சூரியசக்தி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்து விவசாய மோட்டாரை இயக்க அரசு மானியம் வழங்குகிறது. அனைத்து விவசாயிகளுக்கும் சூரியசக்தியில் மின்சாரம் தயாரிக்கச் சாதனங்கள், அதற்குரிய மின் மோட்டார்கள் இலவசமாக வழங்க ஆவன செய்யப்படும்.

● தமிழக அரசின் அனைத்து அரசு அலுவலகக் கட்டடங்கள், அனைத்து மத வழிபாட்டுத் தலங்கள், கல்விக்கூடங்கள் ஆகியவற்றில் சூரிய சக்தி மின் உற்பத்தி செய்து பயன்படுத்தத் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதற்காக, மின் உற்பத்தி செய்வதற்கான சாதனங்கள் வாங்க மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கப்படும்.

● உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தில் ஐந்தில் ஒரு பங்குதான் பயன்பாட்டுக்குக் கிடைக்கிறது. மீதமுள்ள நான்கு பங்கு மின்சாரம் வீணாகிறது. திருவிழா, பொதுக்கூட்டம், அரசியல் கட்சிக் கூட்டம் போன்ற நிகழ்வுகளின்போது மின்சாரத் திருட்டு அதிகமாக நடக்கிறது. இத்தகைய மின் திருட்டுகளைத் தடுக்க கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

● சிறு, குறு தொழில் நிறுவனங்களுக்கு மின் கட்டண சலுகை அளிக்கப்படும். அவர்களும், தங்கள் தேவையின் ஒரு பகுதிக்கு, சூரிய சக்தி மின்சாரத்தைப் பயன்படுத்த ஊக்கமும், உதவியும் அளிக்கப்படும்.

● குடியிருப்புகளில் சூரிய சக்தி மின்சாரத்தைப் பயன்படுத்த ஊக்கம், மானியம் மற்றும் கடனுதவி அளிக்கப்படும்.

● சூரிய சக்தி மின்சாரத்தைப் பயன்படுத்துபவர்களுக்கு உதவுவதற்காக, தமிழ்நாடு மின்சார வாரியத்தில் தனிப் பிரிவு ஏற்படுத்தப்படும்.

● பதவியேற்று இரண்டு வருடங்களை இலக்காகக் கொண்டு, புதிய மின் திட்டங்கள் மற்றும் மாற்று மின் திட்டங்கள் மூலம் தமிழகத்தை உண்மையிலேயே மின் மிகை மாநிலமாக்குவோம். இந்த இரண்டாண்டுகளில் நஷ்டத்தில் இயங்கும் மின்சார வாரியத்தை லாபத்தில் இயங்க வைப்போம். இரண்டாண்டு முடிவில் இது குறித்த வெள்ளை அறிக்கையும் வெளியிடப்படும்.

# 20 பொதுச் சுகாதாரம்

● தமிழகம் முழுவதும் ஒன்றிய அளவில் நியாய விலை மருந்துக் கடைகள் உருவாக்கப்பட்டு, அதன்மூலம் GENERIC MEDICINE (பொதுவான மருந்து) கிடைக்க வழிவகை செய்யப்படும்.

● B.Pharm, D.Pharm படித்துமுடித்து வேலையின்றி இருக்கும் இளைஞர்கள் இத்தகைய மருந்துக் கடைகள் துவங்குவதற்கு வங்கிகள் மூலம் கடனுதவி வழங்கப்படும்.

● பொதுச் சுகாதாரத் துறைக்கான நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்படும்.

● ஒவ்வொரு நகராட்சியிலும் குறைந்தபட்சம் 50 படுக்கைகள் கொண்ட பல்நோக்கு மருத்துவமனை அமைக்கப்படும்.

● அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் ஆங்கில மருத்துவத்தோடு இந்தியப் பாரம்பரிய வழி மருத்துவத்திற்கான தனிப் பிரிவும் அமைக்கப்படும்.

● மருத்துவத் துறையில் உள்ள காலியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

● நீண்ட காலமாகத் தற்காலிகப் பணியாளர்களாகவே பணியாற்றிவரும் செவிலியர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள்.

● கிராமப் புறங்களில் இன்னும் தேவையான மருத்துவ வசதிகள் இல்லாத நிலை உள்ளது. அருகாமை நகரங்களிலுள்ள மருத்துவமனைகளிலும் போதிய வசதி இல்லாத காரணத்தால், கிராமப்புற மக்கள், தனியார் மருத்துவமனையை நாடவேண்டிய நிலை உள்ளது. இந்நிலையைப் போக்கிட, கிராமப்புறங்களில் நடமாடும் மருத்துவமனைகளை இயக்க ஆவன செய்யப்படும். அதேபோல, 108 ஆம்புலனஸ் திட்டத்தின்கீழ் இயங்கிவரும் வாகனங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த ஆவன செய்வோம்.

# 21 பட்டியலின மற்றும் பழங்குடியினர் நலன்

● தமிழக மக்கள் தொகையில், பட்டியலின மக்களும், மலைவாழ் மக்களும் சுமார் 23% பேர் வாழ்கின்றனர். இது தேசிய விகித்தைவிட கூடுதலாகும். சில மாவட்டங்களில் பட்டியலின மக்கள் 30 சதவிகிதத்துக்கு அதிகமாக வாழ்கின்றனர். இவர்களில் 60 சதவிகிதத்துக்குமேல் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்கிற மக்கள். அரசியல் சாசனச் சட்டம் அவர்களுக்கு வழங்கிய வாக்குரிமை, கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் அவர்களுக்கு வழங்கப்பட்ட இட ஒதுக்கீடு, தீண்டாமை ஒழிப்புச் சட்டம் மற்றும் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் போன்ற முன்னெடுப்புகளின் காரணமாக முன்னேற்றப் பாதையில் நடக்கத் தொடங்கிய இவர்கள், மத்தியிலே ப ாஜக அரசு பொறுப்பேற்றபின் தாங்கள் பெற்று வந்த உரிமைகளையும், சலுகைகளையும் இழக்கத் துவங்கியுள்ளனர்.

● உதாரணமாக, நாட்டில் உள்ள பொதுத்துறை நிறுவனங்களில்,பட்டியலின மக்களுக்கு 22.5% வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டிருந்தன. இதன்வழியாக அந்த நிறுவனங்களில் மிக உயர்ந்த பதவிகள், பட்டியலின மக்களுக்கு வழங்கப்பட்டன. ஆனால், பாஜக அரசு நான்கு அல்லது ஐந்து பொதுத்துறை நிறுவனங்களைத் தவிர அனைத்து பொதுத்துறை நிறுவனங்களையும் தனியாருக்கு விற்பனை செய்ய முடிவெடுத்திருப்பதால், இம்மக்களுக்கு ஒதுக்கப்பட்ட 43 லட்சத்து 70 ஆயிரம் வேலைவாய்ப்புகள் பறிபோகும் சூழ்நிலை உருவாகியுள்ளது. இதனால், இளைஞர்களின் எதிர்காலம் சூனியமாகும் அபாயம் உள்ளது. மத்திய அரசு தங்களது பொதுத் துறை நிறுவனங்களை மட்டுமல்லாது, மாநில அரசுகளின் பொதுத்துறை நிறுவனங்களையும் தனியாருக்கு விற்பனை செய்யவேண்டும் என்று வலியுறுத்துகின்றது. மத்திய அரசு சுட்டிக்காட்டும் திசையிலேயே பயணம் செய்வது என்று உறுதி பூண்டுள்ள அ.தி.மு.க அரசு நீடித்தால், தமிழ்நாட்டிலும் பட்டியலின மக்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகும்.

● தீண்டாமை, வன்கொடுமை என்கிற மனிதத் தன்மையற்ற கொடுமைகளிலிருந்து பாதுகாத்திடவும், பொருளாதார சுயச்சார்பை உருவாக்கவும்,பல்வேறு காலகட்டங்களில் உருவாக்கப்பட்ட சட்டத் திட்டங்களை நிறைவேற்றி அமல்படுத்துவதிலும், மத்தியில் ஆளும் பாஜக அரசுக்கும், மாநிலத்தை ஆளும் அதிமுக அரசுக்கும் விருப்பமும், வேட்கையும் இல்லாத காரணத்தால் பட்டியலின மக்கள் முன்னேற்றப் பாதையிலிருந்து சறுக்கத் துவங்கியுள்ளனர்.

● அந்தச் சறுக்கலைத் தடுத்து நிறுத்தி, பட்டியலின மக்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் கல்வி, வேலை, நிலம், தொழில், வர்த்தகம் என அனைத்திலும் அவர்களுடைய உரிமைகளையும், முறையான அதிகாரப் பங்கீட்டையும் பெற்றுத்தரக் காங்கிரஸ் உறுதி ஏற்கிறது. அதற்காகக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயல்திட்டங்களைக் காங்கிரஸ் முன்னெடுக்கும்.

● 'மாநில - பட்டியலின, மலைவாழ் மக்கள் ஆணையம்' உடனடியாக அமைக்கப்படும். பல ஆண்டுகளாக இந்த ஆணையம் தமிழ்நாட்டில் அமைக்கப்படவில்லை. இம்மக்களுக்கு ஏற்படும் பல பிரச்சினைகளில் தீர்வுகாண இவ்வாணையம் பெரும் உதவியாக இருக்கும். புதிய ஆட்சி பொறுப்பேற்ற ஓர் ஆண்டுக்குள் இந்த ஆணையத்தை அமைத்திடக் காங்கிரஸ் முயற்சிகளை மேற்கொள்ளும்.

● எஸ்.சி., எஸ்.டி., வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் படி, தமிழக முதலமைச்சர் தலைமையிலான கண்காணிப்புக் குழுவின் கூட்டத்தை உரிய இடைவெளியில்

நடத்த வேண்டும். மாவட்ட அளவிலும் அக்கூட்டங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் முறையாக நடத்த வேண்டும். தற்போது அக்கூட்டங்கள் முறையாக நடப்பதில்லை. அதனால், இந்தச் சட்டங்களை அமல்படுத்தும் அதிகாரிகள் மத்தியில் ஒரு மெத்தனப்போக்கு உள்ளது. புதிய அரசு பொறுப்பேற்றதும் இக்கூட்டங்கள் முறையாகக் கூட்டப்பட்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பணி செம்மைப்படுத்தப்படும்.

● பட்டியலின மக்கள் தங்களது அன்றாட வாழ்க்கையில் சந்திக்கும் வன்கொடுமைகளுக்கும், இச்சமூகத்துப் பெண்கள் உட்படுத்தப்படும் பாலியல் ரீதியான கொடுமைகளுக்கும் எதிராகத் தொடரப்பட்ட வழக்குகள் விசாரணை முடிவுக்கு வரக் காலதாமதம் ஆகிறது. பல வழக்குகள் இருபது ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையில் உள்ளன. இந்த வழக்குகளை விரைவாக விசாரித்து நீதி வழங்க ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறப்பு விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்படும்.

● தீண்டாமை ஒழிப்பு, சாதி ஒழிப்பு ஆகியவற்றின் சமூக அவசியம் குறித்த கருத்துக்கள் மாணவர்கள் மத்தியில் சிறுவயதிலேயே விதைக்கப்படுவதற்காக, அது குறித்த கருத்துக்களைப் பள்ளிக் கல்விப் பாடத் திட்டத்திலேயே சேர்க்கவேண்டும். சாதிய வன்முறைகளுக்கு முடிவு கட்டுகின்ற வகையிலும், மக்கள் மத்தியில் சமூக நல்லிணக்கத்தை வளர்க்கின்ற விதத்திலும் தொலைக் காட்சி விளம்பரங்கள் மற்றும் பிரச்சார நாடகங்கள் போன்றவற்றுக்கு அரசே ஏற்பாடு செய்யும்.

● பட்டியலினத்தவரின் பண்பாடு, கலாச்சாரம், வரலாறு மற்றும் தமிழ்ச் சமூகத்திற்கு அவர்கள் தந்துள்ள பங்களிப்பு, அதன் தலைவர்களின் பெருமை ஆகியவை பள்ளிப் பாடப் புத்தகத்தில் சேர்க்கப்படும்.

● சாதி மறுப்புத் திருமணம், கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலகங்களில் முன்னுரிமை இருப்பதைப் போல, வேலைவாய்ப்புகளிலும் முன்னுரிமை வழங்கப்படும். மணமக்களில் ஒருவர் பட்டியலினத்தவராக இருந்தால், அவர்களைப் பாராட்டி ரூ. 3 லட்சம் பரிசுத் தொகை வழங்கப்படும்.

● சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டவர்கள் மற்றும் செய்ய இருப்பவர்களைச் சாதி ஆணவப் படுகொலைகள் செய்வதைத் தடுக்க, தனிச் சிறப்புச் சட்டம் இயற்றப்படும்.

● பள்ளி இறுதி வகுப்புக்குப்பிறகு, பட்டியலின மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை (post matric scholarship) வழங்குவதில் மத்திய அரசின் பங்களிப்பு காலதாமதமின்றி உரிய நேரத்தில் கிடைப்பது உறுதி செய்யப்படும்.

● மனிதக் கழிவுகளை மனிதர்களைக் கொண்டே அகற்றுவது, பாதாளச் சாக்கடைகள் - இரசாயனக் கழிவுநீர்த் தொட்டிகள் சுத்தம் செய்வதில் மனிதர்களை ஈடுபடுத்துவது போன்ற மனித மாண்புகளைச் சீர்குலைக்கும் கொடுமைகளுக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்கப்படும். காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு "மனிதக் கழிவு அகற்றுவோர் பணி அமர்த்த தடை மற்றும் அவர்களின் மறுவாழ்வுச் சட்டத்தை இயற்றி 8 ஆண்டுகள் ஆன பின்பும், தமிழக அரசு இன்னும் அந்த சட்டத்திற்கான மாநில விதிகளை உருவாக்காமல் இருக்கிறது. அந்த விதிகள் உடனடியாக உருவாக்கப்பட்டு அமல்படுத்தப்படும்.

● உறுதியான நிலச் சீர்திருத்த நடவடிக்கைகள் மூலம் பட்டியலின, பழங்குடிமக்கள் கையில் நிலம் கிடைப்பதற்கான உறுதியான நடவடிக்கைகளையும் குறிப்பாக பஞ்சமி நிலங்களை மீட்டுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொள்வோம்.

● மத்திய, மாநில அரசுகள் நிதிநிலை அறிக்கையில் மூலதனச் செலவுக்காக ஒதுக்கப்படும் நிதியிலிருந்து பட்டியலின மக்கள் தொகை விகிதாச்சாரப்படி, அவர்களுக்கான திட்டங்களில் மூலதனச்செலவு செலவிடப்படவேண்டும் என்ற சட்டத்தை அன்னை இந்திரா காந்தி நிறைவேற்றித் தந்தார். கலைஞர் அவர்களது ஆட்சியில் **(2006-11)**

இந்தச் சட்டத்தின் விதிகள் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டன. அதிமுக அரசு இதை முழுமையாகச் செயல்படுத்தவில்லை. புதிய அரசில் இந்தச் சட்டம் தமிழகத்தில் முழுமையாக நிறைவேற்றப்படும். புதிய அரசின் முதல் நிதி நிலை அறிக்கையிலேயே இச்சிறப்பு உட்கூறு திட்டம் செயல்படுத்தப்படும்.

● தலித் சமூகத்தைச் சார்ந்த ஊராட்சித் தலைவர்களின் செயல்பாடுகளை முடக்குவது, ஊராட்சி மன்றத்தின் நிர்வாகம் அனைத்தையும் ஆதிக்க சாதியினர் கைப்பற்றிக் கொள்வது, தேசியக்கொடியை ஏற்றவிடாமல் தடுப்பது, தலைவர் நாற்காலியில் அமரவிடாமல் தடுப்பது, போன்ற பாரபட்ச நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் கண்காணிப்புக் குழு உருவாக்கப்படும். தலித் ஊராட்சி தலைவர்கள் சுதந்திரமாகப் பணியாற்றுவதை இக்குழு உறுதி செய்யும்.

● தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் துறை நடத்தும் பள்ளிகளும், மாணவ, மாணவியர் தங்கிப் படிக்கும் விடுதிகளும் அடிப்படை வசதிகளின்றியும், முறையாகப் பராமரிக்கப்படாமலும் உள்ளன. பல விடுதிகளிலும், பள்ளிகளிலும் முறையான கழிப்பிட வசதிகளே இல்லை என்பது அ.தி.மு.க. ஆட்சியின் அவலநிலையைக் காட்டுகிறது. இந்தப்பள்ளிகளும், விடுதிகளும் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டு அடிப்படை வசதிகள் இல்லாத பள்ளிகளுக்கும் விடுதிகளுக்கும் உடனடியாக அத்தகைய வசதிகள் உருவாக்கித் தரப்படும்.

● நரிக்குறவர் சமூகத்தைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

# 22 சுற்றுலா

● அந்நியச் செலவாணியைப் பெருமளவில் ஈட்டித்தரும் சுற்றுலாத்துறை, இன்று பல புதிய பரிணாமங்களைத் தொட்டுள்ளது. கொரோனா நோய்த் தொற்றால் பல வெளிநாட்டுச் சுற்றுலா மையங்களுக்குப் போக்குவரத்து வசதிகள் முடங்கிப் போனதால் தற்போது உள்நாட்டுச் சுற்றுலா மையங்களை மக்கள் நாடத் துவங்கியுள்ளனர். உலக அளவில் கொரோனா நோய்த்தொற்று அதிகம் இல்லாத நாடாக இந்தியா இருப்பதால், மருத்துவம் மற்றும் ஆன்மீகச் சுற்றுலாவுக்கு வருகிறவர்களும் நம் நாட்டையே விரும்புகின்றனர். இந்த புதிய வாய்ப்புகளைத் தமிழகம் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்கிற வகையில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களைக் காங்கிரஸ் செயல்படுத்தும்.

● குறைந்த செலவில் தரமான கல்வியைத் தரக்கூடிய உயர்கல்வி நிறுவனங்கள், பாரம்பரியப் பெருமையும், வரலாற்றுச் சிறப்பும் கொண்ட கலாச்சார மையங்கள், இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ ஆன்மீக வழிபாட்டுத் தலங்கள், அழகான கடற்கரைகள், அற்புதமான மலை வாசஸ்தலங்கள், திறமையான மருத்துவர்களால் நிர்வகிக்கப்படுகின்ற அதிநவீன மருத்துவமனைகள் என்று அனைத்து வகையான சுற்றுலாப் பயணிகளையும் கவரக்கூடிய வசதிகளைத் தமிழகம் நிறையப் பெற்றிருப்பதால், இவை எல்லாவற்றையும் உள்ளடக்கி, அனைத்து வகை சுற்றுலாக்களையும் மேம்படுத்தும் வகையில் ‘தமிழ்நாடு சுற்றுலா சிறப்புத் திட்டம்’ உருவாக்கப்படும்.

● சுற்றுலா சம்பந்தப்பட்ட அனைத்துத் துறைகளிலும் தேர்ந்த இளைஞர்களை உருவாக்கும் வகையில், தேவையான பயிற்சிகளை அளிக்கச் சிறப்புப் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படும். அதற்காக ஒரு தனி பல்கலைக்கழகம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளும் பரிசீலிக்கப்படும்.

● முக்கிய சுற்றுலா மையங்களான மாமல்லபுரம், கொடைக்கானல், உதகமண்டலம், குற்றாலம், கன்னியாகுமரி, மூணாறு, திருவரங்கம், இராமேஸ்வரம், அறுபடைவீடுகள், வேளாங்கண்ணி, நாகப்பட்டினம், பிச்சாவரம், பழவேற்காடு, ஏற்காடு, ஏலகிரி, கொள்ளிமலை போன்ற இடங்களில் சுற்றுலாப் பயணிகள் தங்குமிடங்கள், உணவகங்கள், போக்குவரத்து வசதிகள், தரமான சாலைகள் போன்ற அடிப்படை வசதிகள் சர்வதேச அளவில் மேம்படுத்தப்படும். இத்தகைய அடிப்படை வசதிகளை மேம்படுத்த மாநில அரசும், தனியார் முதலீட்டாளர்களும் சேர்ந்து முதலீடு செய்யத் தகுந்த நிறுவனங்கள் புதிதாக உருவாக்கப்படும்.

● இந்தியாவில் மிக நீளமான, மிக அகலமான, மிக அழகான கடற்கரைகளையும், இயற்கை அழகு நிறைந்த பல சிறிய பகுதிகளைக் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு இருந்தபோதிலும் "கடற்கரை சுற்றுலாவை" போதிய அளவில் முன்னெடுக்கத் தவறிவிட்டோம். இப்பகுதிகளை உலகத்தரம் வாய்ந்த 'Blue Flag' எனப்படும் சான்றிதழ் தரத்திற்கு உயர்த்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

# 23 நெசவாளர் நலன்

● தமிழகத்தில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக பெரும்பங்கு வகிப்பது விசைத்தறி தொழில். தமிழகத்தில் மொத்தம் 25 க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் 6 லட்சத்திற்கு மேற்பட்ட விசைத்தறிகள் இயங்குகின்றன. இத்தொழிலில் நேரடியாக 10 லட்சம் தொழிலாளர்களும், மறைமுகமாக 5 லட்சம் தொழிலாளர்களும், வேலைவாய்ப்பைப் பெற்று தங்கள் வாழ்வாதாரத்தை நடத்திக் கொண்டுள்ளார்கள். கடந்த சில ஆண்டுகளாக நலிவடைந்து மிகுந்த சிரமத்தில் உள்ள விசைத்தறி தொழிலைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

● மாதம் ஒரு முறை விசைத்தறிக்கான மின் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

● மத்திய அரசு கொண்டு வரும் புதிய மின் திட்டத்தில் விசைத்தறிக்கு விலக்கு அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

● விசைத்தறியாளர்கள் பெற்றுள்ள சுமார் 65 கோடி ரூபாய் வங்கி மூலதனக் கடன்கள் தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

● ஜவுளித்துறைக்கு தனியாக ஒரு பல்கலைகழகம் மற்றும் நெசவாளர்கள் நிறைந்துள்ள பகுதியில் ஜவுளிச்சந்தை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

● வருடம் முழுவதும் இலவச வேட்டி, சேலை மற்றும் இலவசப் பள்ளிச் சீருடை உற்பத்தி செய்ய வழிவகை செய்யப்படும்.

● இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கு ஒரு முறை இலவச வேட்டி, சேலை தயாரிப்பதற்கான கூலி உயர்த்தி வழங்கப்படும்.

● GST வரியில் நிலுவையில் உள்ள 13 மாத Input Credit Refund பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும்.

# 24 நீதித்துறையில் சீர்திருத்தங்கள்

● மக்களின் இறுதி நம்பிக்கையாக நீதித்துறையும் சட்டமும் விளங்குவதால் அதனை மேம்படுத்தவேண்டிய கடமை காங்கிரஸ் பேரியக்கத்திற்கு உள்ளது. அதன்மூலம் பிற நியாயமான மற்றும் விரைவான நீதியை வழங்க உறுதி செய்யப்படவேண்டும்.

● தமிழகத்தில் கிராம நியாயாலயச் சட்டம் 2008 அமல்படுத்த முயற்சிகள் எடுக்கப்படும்.

● தமிழகத்தில் வலிமையான 'லோக் ஆயுக்தா' அமைப்பை நடைமுறைப்படுத்த முயற்சிகள் எடுக்கப்படும்.

● நீதித்துறையின் உள்கட்டமைப்புகளை மேம்படுத்த அதிக நிதி ஒதுக்கப்படும்.

● நீதித்துறையின் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்ய 200 வது சட்ட ஆணைய அறிக்கையின்படி, நீதித்துறை நடவடிக்கைகளை ஊடகங்கள் வாயிலாகக் காண்பிக்கச் சிறப்புச் சட்டம் இயற்றப்படும்.

● காவல் நிலைய மரணங்களைத் தடுக்க சிறப்புச் சட்டம் இயற்றப்படும்.

● பாலின ரீதியான வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட பெண்களுக்குச் சட்டம் மற்றும் மனோதத்துவ உதவிகள், மருத்துவ நிபுணர் குழு,காவல்துறையின் மற்றும் இலவச சட்ட உதவிகள் வழங்கப்படும்.

● திருநங்கைகளுக்கான நல்வாழ்வை உறுதிப்படுத்த ,உச்ச நீதிமன்ற ஆணையின்படி சீர்திருத்தங்கள் செய்யப்படும்.

● ஐந்து வருட அனுபவத்திற்கு உட்பட்ட இளம் மற்றும் புதிய வழக்குரைஞர்களுக்கான நல்வாழ்வை உறுதிப்படுத்த, சிறப்புத் திட்டங்கள் கொண்டுவர வழிவகை செய்யப்படும்.

● மாவட்ட நீதிபதி மற்றும் குடிமையியல் நீதிபதிகளுக்கான தேர்வுகள் மற்றும் அதன் பாடங்களையும் எளிமையாக்க வழிவகை செய்யப்படும்.

● தமிழகத்தில் சாட்சிகள் பாதுகாப்புத் திட்டத்தை மேம்படுத்த, சட்ட ரீதியான முயற்சிகள் எடுக்கப்படும்.

● 245 ஆவது சட்ட ஆணைய அறிக்கையின் படி, தேங்கியுள்ள தமிழக அரசின் வழக்குகளை விரைவில் முடிக்க வழிவகை செய்யப்படும். காலியாக உள்ள நீதிபதி இடங்களை மற்றும் நீதிமன்ற அலுவலர்களுக்கான இடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

● பிணக்கிற்கு மாற்றுத் தீர்வு(Alternative Dispute Resolution) நடைமுறைகளை ஊக்குவிக்கும் புதிய திட்டங்கள் உருவாக்கப்படும்.

# 25 காவல்துறையில் சீர்திருத்தங்கள்

● சமுதாயத்தில் சட்ட ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டிய தார்மீகக் கடமை காவல்துறைக்கு உள்ளதால், அதனை நேர்மையான மற்றும் கட்டுப்பாடான துறையாக நடத்தவேண்டும் என்பது தமிழக காங்கிரசின் எண்ணம். அதே நேரத்தில், காவலர்கள் சந்திக்கக் கூடிய சவால்களுக்கு இது தீர்வாக அமைய வேண்டும்.

● காவல் நிலைய மரணங்களையும்,வன்கொடுமைகளையும் தடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

● காவல்துறையை நவீனமயமாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

● கிராம காவல்படை உருவாக்க முயற்சி மேற்கொள்ளப்படும். அதன்மூலம் கிராமப்புற வேலைவாய்ப்புகள் உறுதி செய்யப்படும்.

● சிறை சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு, அதன்மூலம் விசாரணைக் கைதிகளின் எண்ணிக்கை குறைக்கப்படும்.

● சிறுவர் சீர்திருத்த அமைப்புகளை மேம்படுத்தச் சிறப்புக் கவனம் செலுத்தப்படும்.

● காவல் துறையினரின் மனநலத்தைப் பாதுகாக்க, குறிப்பிட்ட இடைவெளி காலங்களில் மனநலம் மற்றும் உடல்நலம் பரிசோதிக்கப்படும். காவல்துறை உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் வேலை சார்ந்த சலுகைகளை அதிகரிக்கவும் திட்டங்கள் வகுக்கப்படும்.

# 26 பத்திரிகையாளர் நலன்

● கொரோனா உட்பட எத்தகைய பேரிடர் காலத்திலும் முன்கள வீரர்களாகப் பணியாற்றும் பத்திரிகையாளர்களுக்குப் பணிப் பாதுகாப்புக்கும், அவர்களின் குடும்பப் பாதுகாப்புக்கும் என நிரந்தரமாக எந்த உத்தரவாதமும் இல்லாமல் இருக்கிறது. பத்திரிகையாளர்களின் ஊதிய விகிதம் மற்றும் ஓய்வூதியத்தை நிர்ணயம் செய்வதற்கும், அவர்களுக்கான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நிரந்தர ஆணையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

● பணியின்போது பாதிக்கப்படும் பத்திரிக்கையாளர்களுக்கு உரிய நிவாரணமும், பணியின்போது இறக்க நேரிடும் பத்திரிக்கையாளர்களின் குடும்ப நிவாரண நிதியை உயர்த்தி வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

# தமிழ்நாடு காங்கிரஸ் தேர்தல் அறிக்கையின் முக்கிய அம்சங்கள்

● அ.தி.மு.க.வில் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் ஒப்பந்தக்காரர்கள் கூட்டணி அமைத்து ஒப்பந்தங்களைத் தொகுப்பதற்கு வழிவகுத்த விதிகள் மாற்றியமைக்கப்படும்.

● முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கண்ட கனவின்படி, உள்ளாட்சிகளுக்கு மீண்டும் அதிகாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

● திறமையும், வலிமையும், அர்ப்பணிப்பும் கொண்ட தமிழக இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறும் வகையில் புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

● தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டங்களில் இருந்து தொழில் தொடங்க விரும்புவோருக்கு, நிலம், மின்சாரம் போன்ற தொழில் ஆதாரத் தேவைகளுக்கு விலையில் சலுகையும் கட்டணத்தில் மானியமும் வழங்கப்படும்.

● குறைந்தது 5 ஆண்டுகளுக்கு வரி விடுமுறை.

● பணமதிப்பிழப்பு, குளறுபடியான ஜிஎஸ்டி மற்றும் கொரோனா தாக்கத்தால் பாதிக்கப்பட்ட சிறு, குறு, நுண் தொழில் முனைவோர், வங்கிகளில் பெற்ற கடனுக்காக 50 சதவிகிதத்தைத் தமிழக அரசு மானியமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

● தமிழகத்தில் புதிய அரசு அமைந்ததும் பூரண மதுவிலக்கை அமல்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

● கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் பெண்களுக்குச் சமவாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

● மண்டல் கமிஷன் பரிந்துரையின்படி, மீனவர்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க மத்திய அரசை வலியுறுத்துவோம்.

● விவசாயிகளை வஞ்சிக்கும் மத்திய அரசின் 3 விவசாயச் சட்டங்களுக்குப் பதிலாக, தமிழகத்தில் விவசாயிகளைப் பாதுகாக்கும் புதிய சட்டங்கள் கொண்டு வரப்படும்.

● காவிரி நீர் மேலாண்மை வாரியத்தையும், ஒழுங்காற்றுக் குழுவையும் தன்னாட்சி அமைப்பாகச் செயல்பட வேண்டும் என்ற உச்ச நீதிமன்ற உத்தரவைச் செயல்படுத்தக் காங்கிரஸ் கட்சி நடவடிக்கை மேற்கொள்ளும்.

- *நீட் தேர்வை ரத்து செய்ய அனைத்து நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும். மருத்துவம் உள்ளிட்ட அனைத்து தொழில் கல்லூரிகளிலும் அரசுப் பள்ளி மாணவர்கள் சேருவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள **7.5** சதவிகிதம் ஒதுக்கீட்டை **10** சதவிகிதமாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.*

- *முதியோர் ஒய்வூதியம் உயர்த்தி வழங்கப்படுவதோடு, அதனை அஞ்சல் துறை மூலம் நேரடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.*

- *இந்து அறநிலையத்துறைக்குட்பட்ட திருக்கோயில்களில், இந்து மதத்தைச் சேர்ந்த அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகராக நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.*

- *முதியோர் உதவித் தொகை பெறுவோர் குடும்பத் தலைவராக இருந்தால், அவர்களது வீடுகளுக்கே சென்று ரேசன் பொருட்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.*

- *தமிழகத்தில் மின் தேவையைக் கணக்கிட்டு, அதற்கு ஏற்றாற்போல் புதிய மின் திட்டங்கள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.*

- *சாதி மறுப்பு திருமணம் செய்து கொண்டவர்கள் ஆணவப் படுகொலை செய்யப்படுவதைத் தடுக்க தனிச் சிறப்புச் சட்டங்கள் கொண்டு வரப்படும்.*

- *மாதம் ஒருமுறை விசைத் தறியாளர்களுக்கு மின் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.*

- *திருநங்கைகளுக்கான நல்வாழ்வை உறுதிப்படுத்த, உச்சநீதிமன்ற உத்தரவுப்படி சீர்திருத்தங்கள் செய்யப்படும்.*

- *பணியின்போது பாதிக்கப்படும் பத்திரிகையாளர்களுக்கு உரிய நிவாரணமும், பணியின் போது இறக்க நேரிடும் பத்திரிகையாளர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் நிவாரண நிதியும் உயர்த்தி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.*

**வாக்குறுதிகள் கைகூட கை சின்னத்தில் வாக்களிப்பீர்!**